விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 03 சனிக்கிழமை (15.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 058

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் ஆரம்பம்!

## நேற்று 48 பேர் சாட்சியமளிப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் நான்கு நாள் விசாரணைகளை நேற்று ஆரம்பித்துள்ளது. கோப்பாய் பிரதேசத்தில் உள்ள காணாமல் போனவர்கள் பற்றி 53 பேர் சாட்சியமளிப்பதற்காக முதல் நாள் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இன்று சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும் அடுத்த இரண்டுதினங்கள் யாழ்.செயலகத்திலும் விசாரணை நடைபெறும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்பும் இராணுவத்தினரால் வீட்டிற்கு வந்து அழைத்து செல்லப்பட்ட பின்பே தமது பிள்ளைகள்மற்றும் உறவினர்கள் காணாமற் போனதாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக் குழுவிடம் காணாமற்போனவர்களின் உறவினர்கள் சாட்சியமளித்துள்ளனர்.

யுத்தகாலத்தில் வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணைகள் நேற்றுக் காலை 9 மணியளவில்யாழ்மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பமானது.

யாழ்.மாவட்டத்தில் இந்த விசாரணைகள் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க..

## இலங்கை மீது ஆஸி கரிசனை

(கொழும்பு)

சர்வதேசம் இலங்கையை தனிமைப்படுத்தக்கூடாது என அவுஸ்திரேலியா கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் சமாதானம், ஜனநாயகம், பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை ஏற்படுத்த அவுஸ்திரேலியா ஆதரவளிக்கும் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கையுடனான இரு தரப்பு குறித்த கொள்கைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் இலங்கையை சர்வதேசம் தனிமைப்படுத்தக் கூடாது என பிஷப் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இலங்கை சுதந்திரதின நிகழ்வுகளில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## 'எனது கணவனை நான் ஒப்படைத்த இராணுவ அதிகாரியை காட்டுவேன்'

### றேகாவின் மனைவி கண்ணீர் மல்க சாட்சியம்



(யாழ்ப்பாணம்)

இறுதிக்கட்ட போரின்போது தனது கணவரான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் றேகாவினை (றேகா) இராணுவ உயர் அதிகாரியிடம்தனது கையால்ஒப்படைத்ததாகவும் அந்த இராணுவ அதிகாரியை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் அவருடைய மனைவியான துளசிகா நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் கண்ணீர்மல்க சாட்சியமளித்துள்ளார்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் வட்டுவாகல் பகுதியில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட தனது கணவனை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கில் யுத்தகாலத்தில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணை யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை 9.30மணி

19 ஆம் பக்கம் பார்க்க..



கோப்பாயில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போது சாட்சியமளிக்கும் காணாமல் போனோரின் உறவினர்களைப் படத்தில் காணலாம்.

## ஆபத்தை நோக்கி இலங்கை அரசு

(கொழும்பு)

நாடு மிகவும் ஆபத்தான நிலைமையை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலைமைக்கு ராஜபக்ஷ அரசாங்கம் முழுப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

நாடு பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. இறுதிக் கட்ட போரின் போது

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

இடம்பெற்றதாக சுமத்தப்படும் உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரப்படுகின்றது.

சர்வதேசம் இது தொடர்பில் பல தடவைகள்கோரிக்கைகளை முன்

20 ஆம் பக்கம் பார்க்க..

## தற்கொலை முயற்சி மேற்கொள்ளும் காணாமல் போனோரின் உறவுகள்

### நேற்றைய சாட்சியத்தில் அம்பலம்

(யாழ்ப்பாணம்)

யுத்த காலத்தில் வடக்கில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் தற்கொலை முயற்சியில்ஈடுபட்டு வருவதாக நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தவர்கள் சுட்டிக்காட்டினர்.

வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்றுக்காலை யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர்பிரிவில் ஆரம்பிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஆணைக்குழுவின் விசாரணைக்கு வருகைதந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் றேகனின் மனைவி உட்பட பலர் தாம் தற்கொலைக்கு முயற்சித்ததாக தெரிவித்தனர்.

காணாமற்போன தமது உறவினர்களை தேடி திரிந்து அலுத்துவிட்டதாகவும் மன உளைச்சல், குடும்ப வறுமை, பாதுகாப்பின்மை போன்ற பல்வேறு காரணங்களினால தாம் இவ்வாறான முடிவிற்கு வந்ததாகவும் தெரிவித்தனர். (எ-6)

## கடலில் மூழ்கி சிறுவன் பலி

(தும்பளை)

தும்பளை கிழக்கு (மூர்க்கம்) கடற்கரையில் நண்பர்களோடு குளிக்கச் சென்ற சிறுவனொருவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நேற்றையதினம் பாடசாலை விடுமுறையென்பதனால் தனது நண்பர்களுடன் காலை வேளை குளிப்பதற்காக இச் சிறுவன் கடலுக்குச் சென்றுள்ளார். அவ்வேளை எதிர்

19 ஆம் பக்கம் பார்க்க..

## சாட்சியமளிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை

### ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ஆணைக்குழுவிடம சாட்சியமளிப்பவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க பாராளுமன்றத்தில் விசேட சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் மக்வேல் பரணஹம தெரிவித்துள்ளார்.

யுத்தகாலத்தில் வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணைகள் நேற்றுக் காலை 9 மணியளவில்யாழ்மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர்பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இந்த விசாரணைகள் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது. கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டுவரையான யுத்த காலப்பகு

20 ஆம் பக்கம் பார்க்க..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திக் குத்துக்கு இலக்கான இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

சக நண்பனின் கத்திக்குத்துக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

இதில் குறவில் உடையார்கட்டு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த அர்ச்சுணன் ரஜிவன் (வயது-19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த புதன்கிழமை சகபாடிகளுக்கு இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு கத்திக் குத்தில் முடிந்ததையடுத்தே மேற்படி விபரீதம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞன் கத்திக்குத்துக்கு இலக்காகி பெருங்குடல், சிறுகுடல், சலப்பைக்கு செல்லும் குழாய் என்பவற்றில் பலத்த காயத்துக்கு உள்ளாகிய நிலையில் உடனடியாக புதுக்குடியிப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

குறித்த இளைஞனை கத்தியால் குத்திய இளைஞனுக்கு 18 வயது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# தேர்தல் அறிவிப்பின் பின்னர் பொலிஸ் அதிகாரிக்கு இடமாற்றம்

மினுவாங்கொட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.லுடோவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களினதும் சட்டவிரோத பதாகை, சுவரொட்டி உள்ளிட்ட தேர்தல் பிரசார விளம்பரங்கள் அப்புறப்படுத்தப்பட்டதாகவும் பிரபல அரசியல்வாதிகளின் தேர்தல் சுவரொட்டிகளும் அதில் அடங்குவதாகவும் அந்த அரசியல்வாதிகள் அழுத்தங்கள் காரணமாக பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டிருக்கலாம் என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், அரச அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள். தேவை ஏற்படும் பட்சத்தில் தேர்தல் ஆணையாளரின் அனுமதியுடன் இடமாற்றம செய்ய முடியும் என தேர்தல் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இவ்வாறான இடமாற்றங்கள் குறித்து பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்தால் தேர்தல் ஆணையாளர் விசாரணைகளை நடத்துவார் என தெரியவருகிறது.

லுடோவை மூன்று மாதங்களுக்கு முன்பே மினுவாங்கொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் அந்த குறுகிய காலத்தில் கசிப்பு உட்பட சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பில் பல்வேறு சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை மினுவாங்கொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இதுவரை இடமாற்றம் செய்யப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். (எ-11)

# சர்வதேச விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச சமூகத்தினால் முன்வைக்கப்பட்டு வரும் விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அரசாங்கம் அறிவித்துள்ளது. யுத்த நிறைவின் பின்னர் அரசாங்கம் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதுடன், நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படவில்லை என்ற சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சமூகம் காலத்திற்கு காலம் இலங்கை தொடர்பான கொள்கைகளை மாற்றி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த சில தரப்பினர் இலங்கை விவகாரத்தில் உள்நோக்கம் ஒன்றுடன் செயற்பட்டு வருகின்றமை புலனாகின்றது எனவும், அனைத்து நாடுகளினதும் ஆதரவினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரங்களில் இலங்கையின் விசேட பிரதிநிதிகள் தென்கொரியா, ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட உள்ள தீர்மானம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி, இலங்கைக்கான ஆதரவினை அதிகரிக்கும் நோக்கில் ராஜதந்திரிகள் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ள உள்ளனர். (எ-11)

# சுய இருப்புகளுக்காக நாட்டிற்கு களங்கம்

## சவேந்திர சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளில் இலங்கையின் நன்மதிப்பிற்கும் களங்கம் ஏற்படுத்தும் முனைப்புக்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நன்மைகளை ஈட்டிக் கொள்ளவும், தங்களது சுய இருப்பிற்காகவும் இவ்வாறு சிலர் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த முயற்சிகளை முறியடிக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். யுத்தம் முடிவுக்குக் கொண்டு



வரப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க முனைப்புக்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள அவர்,

சமாதானமும் ஐக்கியமும் நிறைந்த சுபீட்சமான இலங்கை கட்டியெழுப்பப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# மரண அறிவித்தல்

## அமரர் முருகன்-தவராசா



ஐயனார் கோவிலடி, மகாத்மாவீதி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் தவராசா அவர்கள் 13.02.2014 வியாழக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான முருகன் சீதேவி தம்பதியினரின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான செல்லர் நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலம்சென்ற கனகம்மாவின் பாசமிகு கணவரும், கிருபாகரன் (லண்டன்), புஸ்பநந்தினி, சுதாகரன், சீபாநந்தினி, ஜெயநந்தினி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பேரின்பம், நித்தியானந்தம் (ஜேர்மன்) நாகேந்திரம், பபிதா (லண்டன்), பத்மாஜினி, உதயசங்கர் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலம் சென்ற அசுவதி மற்றும் தவமணி, தங்கவேலு, இரத்தினம், அமிர்தலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆரணி, திவாகர், விந்தியா, அபர்ணா, ஆகாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.02.2014 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஐயனார் கோவிலடி,**
**மகாத்மா வீதி,**
**நெல்லியடி.**

(சி/6508)

**தகவல்:**
**த.சுதாகரன் (மகன்)**
**T.P: 077 7173462**

## முறைப்பாட்டை ஏற்க மறுப்பு

(கொழும்பு)

பொதுபலசேனாவுக்கு எதிராக பௌத்த பிக்கு ஒருவர் செய்த முறைபாட்டை ஏற்றுக்கொள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மறுத்துள்ளது.

மஹியங்கனை பிரதேசசபையின் உறுப்பினரான வண. வட்டரேக்க விஜித தேரர், தமது உயிருக்கு ஆபத்து உள்ளதாக கூறி பொதுபலசேனா அமைப்புக்கு எதிரான முறைப்பாட்டை செய்ய சென்றிருந்தார்.

எனினும் அவரது முறைப்பாட்டை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளவில்லை. இதனையடுத்து அவர் ஆணைக்குழுவின் அலுவலகம் முன்னால் [illegible] நடத்தினார். (எ-11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்
## நன்றி நவிலலும்



மலர்வு
18 - 06 - 1937

உதிர்வு
16 - 01 - 2014

அமரர் **திரு.கற்பர் வீரவாகு**

கடந்த 16.01.2014 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கற்பர் வீரவாகு அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு இறுதிக்கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று 15.02.2014 சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

[illegible],
குடத்தனை.

(6509)

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## குதிரை

"குதிரைக்கும் கழுதைக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டார் ஒருத்தர்.

"குதித்து ஓடத் தெரிந்தால் அது குதிரை. கனைத்துக் கொண்டே சுமக்கத் தெரிந்தால் அது கழுதை என்று அதற்கு வேடிக்கையான விளக்கம் கொடுத்தார் இன்னொருத்தர்.

இந்த உலகத்தில் சுமப்பதற்கென்றே பிறந்தது கழுதை. ஓடுவதற்கென்றே பிறந்தது குதிரை. அடுத்தவர்களின் முதுகில் சவாரி பண்ணுவதற்கென்றே பிறந்தவன் மனிதன்.

அதனால்தான் குதிரையின் முதுகில் ஏறி உட்கார்ந்து கொள்கிறான். அது மட்டுமல்ல. அது அங்குமிங்கும் பார்க்காமல் வேகமாக ஓட வேண்டுமென்பதற்காக அதற்கு கண்ணாடிக்கும் மாட்டிவிடுகிறான். குதிரையின் கண் இருக்கிறதல்லவா அது கொஞ்சம் வித்தியாசமானது.

குதிரையின் தலையில் கண் பக்கவாட்டில் இருக்கும். இதனால் அதற்கு இரண்டு ஒற்றைக் கண் பார்வை கிடைக்கிறதாம். அது ஒரே சமயத்தில் தன்னுடைய இரண்டு பக்கவாட்டுத் திசைகளிலும் பார்க்க முடியுமாம். அது மட்டுமல்ல தனக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பதையும் அதனால் பார்க்க முடியுமாம். நம்மால் அதனைப் போன்று பார்க்க முடிந்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும். அதன் உடம்பால் மறைக்கப்படும் பின்பகுதியை மட்டும்தான் குதிரையால் பார்க்க முடிவதில்லை. தனக்கு முன்னால் உள்ள ஒரு பொருளை இரண்டு கண்களாலும் பார்க்கும் போது கண்களை முன்பக்கம் திருப்பி பார்வையைக் குவியப்படுத்தும். அப்பொழுது அதற்கு பக்கவாட்டுப் பார்வையும் பின்புறப்பார்வையும் மறைந்து விடும்.

அப்படி அது இரண்டு கண்களின் பார்வையையும் குவித்துப் பார்க்கும் போது அதனுடைய கண்கள் சுமார் 1.2 மீற்றருக்கு குறைவான தொலைவிலிருக்கும் பொருட்களை குவியப்படுத்த முடியாதாம். அதனால் அது தான் உண்ணும் இரையைக்கூடப் பார்ப்பதே இல்லையாம். வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

நாம்கூட பல சமயங்களில் அவசரமாக சாப்பிடும் போது சாப்பிடுவது என்ன என்பதைக் கவனித்தா சாப்பிடுகிறோம்? சாப்பிடுவதுவெல்லாம் தொண்டைக்கும் வாய்க்கும்தான் வெளிச்சம். குதிரைக்கும் நமக்கும் இப்படி ஒரு ஒற்றுமை.

குதிரையை வண்டியில் கட்டும்போது, சவாரி செய்யும் போதெல்லாம் அதன் கண்ணுக்கு -கண்ணாடிக்கும் என்று சொல்லி திரைபோட்டு மறைத்து விடுவது... எதற்கென்றால்...அப்பொழுதுதான் அது போகும் திசையில் மட்டும் கவனத்தை வைத்துக்கொண்டு ஓடும். பக்கத்திலும் பின்னாலேயும் என்ன நடக்கிறதென்பதே அதற்குத் தெரியாது. குதிரைப் பந்தயத்தில் தடை தாண்டும் போட்டிகளை பார்த்திருக்கிறீர்களா? நடுவில் வைத்திருக்கும் தடைகளை தாண்டி ஓடும். அந்த சமயத்திலெல்லாம் அது தரையையோ தடையையோ பார்க்க முடியாதாம். ஏதோ ஒரு குருட்டாம் போக்கில்தான் தாண்டுமாம்.

ஆனால் ஒரு விடயம். எந்த நேரத்தில் கால்களைத் தூக்கி எழும்ப வேண்டுமென்பதை குதிரை மீது உட்கார்ந்திருப்பவர் சைகைகள் மூலமாக தெரிவித்து விடுகிறார். அதைப் புரிந்து கொண்டு அது தாண்டி விடுகிறது. அவ்வளவுதான். அவர் தவறுதலாக ஏதாவது காட்டி விட்டால் குப்புற விழ வேண்டியதுதான். குதிரையின் கண்களைவிட உயர்ந்த மட்டத்திலிருக்கும் பொருளையும் அதனால் தெளிவாகப் பார்க்க முடியாது. மிகத் தூரத்தில் உள்ள பொருளையும் விபரமாக பார்க்க முடியாது. அது மட்டுமல்ல நிறங்களையெல்லாம் அதனால் கண்டு பிடிக்க முடியாது. (நிறக்குருடு)

சரி, இப்படியெல்லாம் இருந்தும் குதிரை எப்படி சமாளிக்கிறது? இதற்கு கைகொடுப்பது அதனுடைய கழுத்து. அதற்கு நீளமான கழுத்து. அதன் உதவியால் தலையை அவ்வப்போது தகுந்த நிலைமைக்கு மாற்றி திருப்பி தன்னுடைய கண்ணில் பொருள் தெளிவாக தெரியும்படி செய்து கொள்கிறது.

தலையைத் தூக்கி விட்டால் தூரத்தில் உள்ளதை பார்க்கும். தாழ்த்தி விட்டால் அண்மையில் உள்ளதை பார்க்கும்.

கண்ணில் விழித்திரை ஒன்று இருக்கும் அல்லவா? அது மற்ற விலங்குகளுக்கு குழிவாக இருக்கும். குதிரைக்கு தட்டையாக இருக்கும். அதனால்தான் தலையைத் திருப்பி விம்பம் விழுவது மாதிரி செய்து கொள்ள முடிகிறதாம்.

ஒரு நல்ல தரமான குதிரை எப்படி இருக்க வேண்டும்? நெற்றி குறுகலாக இருக்க வேண்டும். இரண்டு பக்கமும் கண் சமமாக சரியாக இருக்க வேண்டும். இப்படி இருந்தால் அந்தக் குதிரை தன் தலைக்கு முன்னால் இருப்பதை தெளிவாக பார்க்க முடியும். அதுதான் உயர்தரமான குதிரை.

குதிரைக்கு பழக்கமும் பயிற்சியும் மிக முக்கியம். ஒருத்தர் ஒரு குதிரைக்கு பயிற்சி கொடுத்து கொண்டிருந்தார். அந்தக் குதிரை முன்னால் நின்று கொண்டிருக்கும் இவர் பின்னால் கொஞ்ச தூரத்தில் இருந்து வேகமாக ஓடி வந்து ஒரு 'ஜம்ப்' பண்ணுவார். அப்படியே உயர ஆகாயத்தில் எழும்பி குதிரையின் முதுகில் போய் பொத்தென்று உட்காருவார். அதே விநாடி அந்தக் குதிரை பாய்ந்து ஓட ஆரம்பித்து விடும். அப்படி ஒரு பயிற்சி. இதைப்பார்த்த ஒரு பெரியவர் "இப்படி பொத்தென்று போய் விழுந்தால் குதிரையின் இடுப்பு என்னத்திற்கு ஆகும் உடைந்து விடாதா" என்றார். இவர் அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

கொஞ்ச நாள் கழித்து, பயிற்சி கொடுத்தவர் அந்த பெரியவரை மறுபடியும் பார்த்தார்.

"ஐயா" நீங்கள் சொன்னது மாதிரியே இடுப்பு உடைந்துபோய் விட்டது" என்றார்.

"குதிரைக்கா?" என்று கேட்டார் அவர்.

"இல்லை... எனக்கு!" என்றார் இவர்.

பார்த்தால் இடுப்பு வளைந்து போயிருந்தது.

"எப்படி?" என்று கேட்டார் அவர்.

"குதிரைக்கு பயிற்சி எல்லாம் நல்லாத்தான் கொடுத்தேன். அது முடிந்த பின்னர் ஒரு தடவை நான் வழக்கம் போல பின்னாலிருந்து ஓடி வந்து ஸ்டைலாக 'ஜம்ப்' பண்ணி ஆகாயத்தில் எழும்பி குதிரையின் முதுகில் உட்கார போனேன். நான் உட்காருவதற்கு முன் குதிரை ஓட ஆரம்பித்து விட்டது. தரையில் உட்கார்ந்து விட்டேன் அதுதான் இப்படி ஆகிவிட்டது" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழர்களுக்காக நாம் கொடுத்த குரலை சர்வதேசம் அலட்சியம் செய்துவிட்டது

## ம.தி.மு.க. செயலர் வைகோ கவலை

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி லண்டனில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவராக அதிகார பூர்வமாக பொறுப்பேற்கத திட்டமிட்டுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ குறித்த அமைப்பின் தலைவராக முடி சூட்டியது மன்னிக்க முடியாததாகும்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவராக இலங்கை ஜனாதிபதி பதவிஏற்பதை எதிர்த்து போராட வேண்டும். என ம.தி.மு.க. பொதுச செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, மிகக் கொடூரமான அழிவுகளை ஈழத்தமிழர்களுக்கு இலங்கை அரசு செய்துள்ளது. என்பதற்கான ஆதாரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள திருக்கேதீஸ்வரப் பகுதியல் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட தமிழர்களின் எலும்புக்கூடுகள். குழாய்கள் பதிப்பதற்காக மண்ணை அகழ்ந்த போது வெளிப்பட்டன.

கடந்த 2009 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கை இராணுவத்தினர் ஈழத்தமிழர்களைக் கூட்டம் கூட்டமாகப படுகொலை செய்ததையும். குறிப்பாகத தமிழ் இளைஞர்களை காடுகளுக்குள் இழுத்துச் சென்று சுட்டுக்கொன்றதையும், தமிழ்ப் பெண்கள்மிகக் கோரமான முறையில் கொலை செய்யப்பட்டதையும் உலகத்துக்கு சுட்டிக்காட்டிய போது நமது குரல் அலட்சியப்படுத்தப்பட்டது. உலக நாடுகளின் செவிகள் செவிட்டுக்காதுகள் ஆகின. விழிகள் குருட்டுக் கண்களாக இருந்தன.

சனல்-4 காணொலியில் 8 இளம் தமிழர்கள் கைகள், கண்கள் கட்டப்பட்டு, நிர்வாணமான நிலையில் சுட்டுக்கொல்லப்பட்ட காட்சி மனிதாபிமானம் உள்ளோர் மனங்களை உலுக்கியது. தமிழர்கள் நெஞ்சில் விழுந்த பேரிடி என 2010 டிசெம்பர் 2 ஆம் திகதி அதே சனல்-4 காணொலியில, இசைப்பிரியா இலங்கை இராணுவத்தினரால கொடூரமாகக் கற்பழிக்கப்பட்டு படு கொலைக்கு ஆளாகி, சிதைந்து நிர்வாண சடலமாக மண்ணில் கிடந்த காட்சி தமிழ் இனப்படு கொலையின் உக்கிரத்தை உலகுக்கு உணர்த்தியது.

மாவீர மகன் பாலச்சந்திரன், மார்பிலே 5 குண்டுகள் தாங்கி பூமியில் கிடந்தகாட்சியை சனல்-4 இல் கண்டு தமிழகத்தின் இளைஞர்களும், மாணவர்களும் எரிமலையாய் சீறினார்கள்.

2009 இல் போரின் உச்சக்கட்டத்தின் போது, இலங்கை இராணுவம் ஈழத் தமிழ்ப் பெண்களை வதைத்துக் கொன்ற காட்சி புதிய ஆதாரமாகக் கிடைத்துள்ளது. அந்தக் கொடுமையை எழுத்தில் பதிய என் மனம் மறுக்கிறது. ஐயோ! இப்படியும் ஒரு கொடுமையா? என்று புலம்பி தவிக்கிறது.

எனவே, இலங்கைத் தீவில் அரசு நடத்தியது போர்க்குற்றமல்ல, அப்பட்டமான இனப்படுகொலை என்ற உண்மையை உலக நாடுகள் உணர வேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு நீதி கிடைக்க இந்த இனக்கொலை குற்றத்துக்கு சுதந்திரமான அனைத்துலக நீதி விசாரணை வேண்டும்' என்ற ஆவேச முழக்கம், எதிர் வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி ஜெனீவாவில் முருகதாசன் திடலில் விண்முட்ட எழு வதற்கு புலம்பெயர் வாழ் ஈழத் தமிழர்கள் சங்கமிக்க உள்ளனர். அதற்கு ஆயத்தப்படுத்தவும் நீதி கேட்கும் குரல் உலகெங்கிலும் ஒலிக் கவும் பெப்ரவரி 26 ஆம் தேதி, தாய்த் தமிழகத்திலும் தரணி எங்கும் தன்மானத் தமிழர்கள் சாதி, மதம், கட்சிகள் கடந்து நீதி கேட்கும் போர் முழக்கத்தை எழுப்பிட தயாராகிக் கொண்டுள்ளனர்.

இந்தச் சூழலில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மார்ச மாதம் 10 ஆம திகதி லண்டனில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவராக அதிகார பூர்வமாக பொறுப்பேற்க திட்டமிட்டுள்ளர். கூண்டில் குற்றவாளியாக நிறுத்தப்பட வேண்டிய அவர் குறித்த அமைப்பு தலைவனாக முடி சூட்டியது மன்னிக்க முடியாததாகும்.

முருகதாசன் தீக்குளித்து மடிந்த மார்ச் மாதம் 10 ஆம் திக தியில், தமிழர்கள் ஜெனீவாவில் நீதி கேட்டு அறப்போர் நடத்தும் நாளில், லண்டனில் பதவியேற்பு விழா வுக்கு திட்டமிட்டுள்ளார்.

முன்பு லண்டன் மாநகரிலே ஈழத் தமிழர்கள் ஆர்த்தெழுந்து இலங்கை ஜனாதிபதியை விரட்டி அடித்த அதே பாடத்தை மீண்டும் புகட்ட வேண்டும். 'பிரித்தானிய மண்ணுக்குள் நுழையாதே! லண்டன் அரசே இந்த அநதிக்குத் துணைபோகாதே!' எனும் அறப் போருக்கும் லண்டன்-வாழ் தமிழர்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 120 |
| தக்காளி | 60 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 50 |
| கரட் | 60 | 80 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100 | 70-100 |
| பெரிய வெங்காயம் | 60-80 | 90 | 60 |
| பாகற்காய் | 80-120 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 50-70 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 50 |
| பயற்றங்காய் | 160 | 150 | 100 |
| லீக்ஸ் | 50 | 90 | 80 |
| பீற்றூட் | 30 | 70 | 50 |
| கறிமிளகாய் | 70 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 180 | 400 |
| போஞ்சி | 40 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 40-45 |
| இராசவள்ளி | 70 | — | 100 |

# இராசி பலன்

15.02.2014
(மாசி 03, சனிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
பிரதமை முழுவதும்
மகம் பின்னிரவு 4.10 மணிவரை
இராகுகாலம் 9.33-11.03 மணிவரை
சுபநேரம் 3.33-5.03 மணிவரை
மாசி மகம், அமிர்த சித்தம்

**மேடம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

**இடபம்** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, உங்களின் சிறந்த யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள்.

**கன்னி** காரிய அலைச்சல்கள் கூடும், சுப விரயங்கள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு k «é VD, சாமர்த்தியமாகப் பேசி காரியங்களை சாதிக்க வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்.

**மகரம்** எதிர்பாராத வகையில் குடும்பத்தில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், வேலைச் சுமை கூடும், போசன நன்மையுண்டு, கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், உடல் நலம் சீராகும், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், தேக நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

புதிய உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின் விநியோகம் தடைப்படும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை வைமன் வீதி, கோவில் வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்டம், பழைய பூங்கா, அத்தியடி புது வீதி, சோமசுந்திரம் அவனியூ, முலவைச் சந்தி, OLR பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, கச்சேரியடி, சுண்டுக்குளி, புங்கன்குளம், ஈச்ச மோட்டை, பாசையூர், மணியந்தோட்டம், உதய புரம் , நெடுங்குளம், கொழும்புத்துறை ஆகிய இடங்களிலும்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை உரும்பிராய் , கோண்டாவில், மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, யாழ் நகரம் முழுவதும், யாழ்.மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, கலட்டி தட்டார் தெரு, மனோகரா, கஸ்தூரியார் வீதி, குருநகர், பாசையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ்.பிரதான வீதி, பண்ணைப் பகுதி , ஊரெழு, உரும்பிராய் ஒரு பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, போயிட்டி, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்கு, மணியந்தோட்டம், உதயபுரம், நெடுங்குளம், தூண்டி, வசந்தபுரம், ஆனந்தன்வடலி வீதி, மகேந்திரபுரம், தேவபுரம், கொழும்புத்துறை வீதியில் ஒரு பகுதி, கொக்குவில் சந்தி, கம்பஸ் லேன், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், முடமாவடி, பாற்பண்ணை, சிவப்பிரகாசம் வீதி, பூநாறி மரத்தடி, நாச்சிமார் கோவில், இராச வீதி, கல்வியியற் கல்லூரி, 51 பிறிகேட் இராணுவ தலமையகம், கோப்பாய் கிருஸ்ணன் கோவில், பொற்பதி வீதி, கோண்டாவில் இருபாலை வீதி, கோண்டாவில் மேற்கு, பலாலி வீதி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



நன்றி: ஜலன்ட்




# மஹோற்சவம்

திருநெல்வேலி பழங் கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.


இதில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சத் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கயிலாய வாகன வீதியுலாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (அ-2)

# எச்சரிக்கை விளக்குகள் பொருத்தப்படாத நிலையில் வேலைகள் நடைபெறுகின்றன

## அவ் வீதியில் தொடரும் விபத்துக்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறை வீதியின் மனோகரா தியேட்டருக்கு சற்று அப்பால் நிலத்தடி கம்பிகள் செல் வதற்கான சுரங்க வேலைகள், உரிய சமிக்ஞைகள் இடப்படாமையினால் விபத்துக்கள் இடம்பெற்று வருவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். குறித்த நிறுவனத்தினரால் காங் கேசன்துறை வீதியிலுள்ள மனோகரா தியேட் டருக்கு சற்று அப்பாலுள்ள பகுதியில் நிலத்தடி கம்பிகள் செல்வதற்கான சுரங்க வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

ஆயினும் பயணிப்பவர்கள் அடையாளங் காணக்கூடிய வகையில் வேலைத் தளத்திலிருந்து குறித்த தூரத்தில் எச்சரிக்கை பலகையோ அல்லது சமிக்ஞை விளக்கோ இடப்பட வில்லை.

இதனால் இரவில் வீதியால் பயணிப்பவர்கள் விபத்துக்குள்ளாகிய சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

குறித்த இவ்வேலைகள் இடம்பெறுவதனை இனங்காண்பதற்குரிய அடையாளமின்மையே விபத்துக்களுக்கான காரணமென பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, குறித்த நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் மேற்படி வேலைக்கு வேலைத்தளத்திலிருந்து குறித்த தூரத்தில் உரிய அடையாளங்களையும் இனங்காணக்கூடிய சமிக்ஞைகளையும் இடுமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9)

## இந்து சமய நாடகப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையிலான சைவ சமய நாடகப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இதில் கலந்து கொள்ளும் மாணவர்களை குறித்த நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு சமுகம் அளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (அ-9-29)

## தொழிற்பயிற்சி இன்று ஆரம்பம்

கைதடி நுணாவில் அறவழி போராட்டக் குழுவினரால் இவ் வருடத்திற்கான தொழிற் பயிற்சி நெறிகள் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு போராட்டக்குழு மண்டபத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது

எனவே இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களை உரிய நேரத்திற்கு சமுகம் அளிக்குமாறு இயக்குநர் ரி.கே. பாலநாதன் அறிவித்துள்ளார். (அ-9-29)



கொக்குவில் வளர்மதி முன்பள்ளியின் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறார்களின் கலை நிகழ்வையும் புதிய மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# வளர்ப்பு நாய்களுக்கும் வரி அறவிடப்படும்

## பிரதேச சபை தீர்மானம்

வடமராட்சி பகுதியிலுள்ள நாய்களின் பெருக்கத்தை குறைக்கும் நோக்கோடு வரி அறவிடும் புதிய நடைமுறை கரவெட்டி பிரதேச சபையினரால் கொண்டு வரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட வீடுகளிலுள்ள வளர்ப்பு நாய்களின் எண்ணிக்கை கணிக்கப்பட்டு அதற்குரிய இலக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் பின்னர் வீடுகளில் வளர்க்கப்படுகின்ற நாய்களுக்கு வருடத்திற்கு தலா 50 ரூபா வீதம் வரி அறிவிடப்படவுள்ளது.

இந் நடவடிக்கையினை பிரதேச சபையினர் அப் பகுதி சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளனர்.

இதனூடாக கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளைக் குறைக்க முடியுமென சபையினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (அ-9-60)

# வடக்கு மாகாணத்தில் விருது வழங்குவதற்கான போட்டிகள்

ஜனாதிபதி விருது, ஆளுநர் விருது, முதலமைச்சர் விருது வழங்குவதற்கு நிகழ்வுகள் நடாத்தப்படவுள்ளன.

இதற்காக கூத்து, இசை நாடகம், கூத்து வழி நடனங்களுக்கிடையில் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் செயலக இணைப்பாளர் ந.சிறீதேவி அறிவித்துள்ளார்.

மேற்குறித்த போட்டிகள் வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத இயங்கு நிலையிலுள்ள கலை இலக்கிய மன்றங்களுக்கிடையே நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பாளர், இல. காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் நாடகப் போட்டி என்று குறிப்பிடுதல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் செயலாளர் அலுவலகத்தில் பார்வையிட முடியும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலைநேர வீதியோட்டம்

யா/நல்லூர் மங்கயர்கரசி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வின் முன்னோடி நிகழ்ச்சியாகிய மாலை நேர வீதியோட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5 மணிக்கு 5 ஆவது தடவையாக நடைபெறவுள்ளது.

யாழ். வலய உடற்கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் போட்டியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். மத்தியஸ்தராக யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் செ.தேவரஞ்சன் கடமையாற்றவுள்ளார். (அ-2)

# அன்பு வார ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு நடத்தும் அன்பு வார ஒன்றுகூடல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறும்.

இதேவேளை, வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுவினால் கடந்த ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட அன்பு வார கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசில்களும் அன்றையதினம் வழங்கப்படும்.

இப்போட்டிகளில் முதல்மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**கட்டுரைப் போட்டி I ஆம் பிரிவு**

யோ.டிவின்சியா- பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் உயர்தர பாடசாலை, க.விஸ்ணுஜி-பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் உயர்தர பாடசாலை,(இருவர் மூன்றாம் இடம்) சி.ஹஜீபனா-வட்டுமத்தியகல்லூரி, கோ.சிஜானி-கோண்டாவில் மகா வித்தியாலயம்.

**கட்டுரைப் போட்டி II ஆம் பிரிவு**

உ.கௌசிகா- கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயம், த.சிவாசினி- சுழிபுரம் விக்ரோர்யா கல்லூரி, (மூவர் மூன்றாம் இடம்) அ.பஸ்மியா- ஊரெழு கணேசா வித்தியாலயம்,ஜோ.விதுசன்- சென்.ஜோன்ஸ் கல்லூரி, றோ.வனுசன் -மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**கட்டுரைப் போட்டி III ஆம் பிரிவு**

ப.குருபரநேசன்- மானிப்பாய் இந்துக் கல்லூரி, இ.குயிலினி- புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, வே.கிருஸ்ணவி- அச்சுவேலி புனித தெரேசா மகா வித்தியாலயம்.

**கவிதைப் போட்டி**

ஸ்.டினோபா- புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, தி.கஸ்தூரி- பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் உயர்தர பர்டசாலை, (மூவர் மூன்றாம் இடம்) ஜெ.மேரி- கரம்பன் சிறிய புஸ்பம் மகா வித்தியாலயம், க. நித்திலா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வல்வெட்டித்துறை, ஜெனிபா- அச்சுவேலி புனித தெரேசாள் மகா வித்தியாலயம்.

**சித்திரப் போட்டி**

உ.ராம்கி- அச்சுவேலி மத்திய கல்லூரி, க.கரன்- வசாவிளான் மத்திய கல்லூரி, வ. தனுசுயன்- இணுவில் மத்திய கல்லூரி. (அ-2)

# மோசடிகள் நிரூபிக்கப்பட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன

ஓய்வூதியத் திணைக்களத்தில் இடம்பெறுவதாக குற்றம்சாட்டப்படும் ஊழல் மோசடிகள் நிரூபிக்கப்படுமாயின் அதனுடன் சம்பந்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

கணவனை இழந்த பெண்கள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் அங்கு கடமை செய்யும் உத்தியோகத்தர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுனில் ஹெட்டியாரச்சி பகிரங்கமாக ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

திணைக்களத்தில் சில அதிகாரிகள் போலி கையொப்பங்களையிட்டு ஓய்வூதியப் பணத்தில் மோசடிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார். இதனையடுத்து நிலைமைகளை ஓய்வூதியத் திணைக்களத்துக்கு நேரில் சென்று ஆராய்ந்த அமைச்சர் செனவிரட்ன, விரிவாக ஆராயும் பொருட்டு இரு தரப்புடனும் விசேட சந்திப்பொன்றினை எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஓய்வூதியத் திணைக்களத்தில் நடத்தவுள்ளார்.

ஏற்கனவே இதே குற்றச்சாட்டின் பேரில் அடையாளம் காணப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்ட இரண்டு அதிகாரிகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்ட சிலரே சங்கிலித் தொடராக ஓய்வூதியப் பணத்தில் மோசடிகளை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

தனது ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வந்த ஒரு நபரிடம் குறித்த அதிகாரிகள் சுமார் ஒரு இலட்சம் ரூபா வரையில் இலஞ்சம் கோரியுள்ளனர். இதனால் கோபமடைந்த நபர் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் முறையிட்டதைத் தொடர்ந்து அங்கு பெரும் அமளிதுமளி ஏற்பட்டுள்ளது. நிலைமையை கட்டுப்படுத்தும் முகமாக மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபரிடம் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வதாக மாளிகாவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரொஹான் பெரேரா தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய அமைச்சரிடம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தம்மீது பொய்க் குற்றச்சாட்டு சுமத்தும் பணிப்பாளர் நாயகத்தினை இடம்மாற்றக் கோரினார்.

உண்மை நிலவரம் குறித்து பொலிஸ் மோசடிகள் பிரிவு விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கூறிய அமைச்சர் அரசாங்கத்தின் பணத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது உறுதியெனவும் கூறினார். (அ-2)

## அனுபவ பகிர்வு- தென்கொரியா

(கொழும்பு)

தென்கொரியாவின் அபிவிருத்தி அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ள அந்த நாட்டின் பிரதமர் ச்சங் ஹொங் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் விசேட தூதுவராக பசில் ராஜபக்ஷ தென்கொரியா சென்றுள்ளார். அங்கு அவர் அந்த நாட்டு பிரதமரை சந்தித்திருந்தார்.

இதன்போது தென்கொரியா கடந்த 1970 ஆம் ஆண்டுக்கு பின்னர் அடைந்த அபிவிருத்திக்கு ஏதுவான காரணிகளை இலங்கையுடன் பகிர்ந்து கொண்டு இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் என்று ச்சங் ஹொங் தெரிவித்துள்ளார். (அ-2)

## அரசாங்க அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி கோரல்

யாழ். மாவட்ட செயலகத்தால் பின்வரும் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிகமான தகவல்களையும் விண்ணப்பப்படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 2014.02.17 தொடக்கம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். www.jaffna.dist.gov.lk என்ற இணையத்தளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2014.03.03 ஆம் திகதி பிற்பகல் 2.30 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கலின் விபரத்தினை குறிப்பிட்டு ''தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 2014.03.03 ஆம் திகதி பிற்பகல் 3.00 க்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன் போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

- காகிதாதிகள், எழுது பொருட்கள்
- மின் இணைப்பு பொருட்கள்
- நுகர்வுப் பொருட்கள்
- ஹாட்வெயர் பொருட்கள்
- வாகன ரயர்கள்
- குடிநீர் வகைகள்/பால்மா வகைகள்

**சுந்தரம் அருமைநாயகம்,**
**மாவட்டச் செயலரும் அரசாங்க அதிபரும்,**
**யாழ்.மாவட்டம்.**

(சி-6498)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 28 செவ் 12 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி / ஆசிரியர்
தொ.இ: B/1083

பிறப்பு: 1983 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 77.25 செவ் 7 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Q.S / வர்த்தகர் (UK – Student Visa)
தொ.இ: B/1086

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா: 43.75 செவ் 2 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: NCT Civil, Draughtsman / Technical Officer
தொ.இ: B/1089

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா: 12
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L / வியாபாரம்
தொ.இ: B/1092

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: 26.75 செவ் 4 ல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: BBM, M.Sc / லண்டன் (Work Permit)
தொ.இ: G/1561

பிறப்பு: 1976 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: 46
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/1564

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 37.5 சூரி, செவ் 12 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA, HNDA, DBF, Charted / வங்கியாளர்
தொ.இ: G/1565

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: 49 சூரி, செவ் 3 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/1570

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையின் கட்டடம் அவுஸ்ரேலிய நாட்டின் நிதியுதவியுடன் யுனிசெப் நிறுனவத்தினரால் கட்டப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட போது...
(படங்கள்:-முல்லைத்தீவு செய்தியாளர்)

## கல்வியியலாளர் கௌரவிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் ஆரம்பகால கல்வியியலாளர்களாக திகழ்ந்து சேவையாற்றியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கல்லூரியின் பல்நோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் முதலாம் அணி மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இக் கௌரவிப்பு நிகழ்வில் கல்லூரியின் ஓய்வுபெற்றவர்களான பீடாதிபதி செ.அழகரத்தினம், பீடாதிபதி க.பேர்ணாட், எஸ்.கே.யோக நாதன் மற்றும்உப பீடாதிபதிகளான த.இன்பதேவ ராஜா, த.ம. தேவேந்திரன், சகாப்தீன், மகரகம அரசினர் ஆசிரியர் பயிற்சி கலா சாலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரன், பதில் பீடாதிபதி கு. சிதம்பர நாதன், மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சி கலா சாலை அதிபர் யோகராஜா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-9-266)

# கொக்கிளாய் முகத்துவாரப்பகுதியில் தொடரும் காணி அபகரிப்பு

(குருமன்காடு)

கொக்கிளாய் முகத்துவாரப் பகுதியிலுள்ள தமிழ் மக்களின் காணிகள் மேலும் மேலும் அபகரிக்கப்படுவதாக வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி கிராம மக்களினால் தமது காணிகள் அபகரிக்கப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டதையடுத்தே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

கொக்கிளாய் முகத்துவாரப் பகுதி தமிழ் மக்களின் பூர்வீக இடமாகும்.

ஆயினும் சில தசாப்தங்களுக்கு முன்னர் சிங்கள மீனவர்கள் மீன் பிடி நடவடிக்கைகளுக்காக அக் காலப்பகுதியில் மாத்திரம் வந்து செல்வதை வழக்கமாக கொண்டிருந்தனர்.

இந் நிலையில் 1983 ஆம் ஆண்டிற்கு முன்னர் சுமார் 15 குடும்பங்கள் மாத்திரமே இருந்த போது அரசியல் வாதிகளின் துணையுடன் மாதிரிக் கிராம்ம் என்ற பெயரில் தமிழரின் காணிகளை அபகரித்து சிங்களவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

ஆயினும் தற்போது மேலும் பல தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அங்கிருக்கும் 250 இற்கும் மேற்பட்ட சிங்கள மீனவ குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத் திட் டத்தை பெற்றுக்கொடுக்கும் முயற்சிகள் திரை மறைவில் இடம் பெறுவதாக காணி உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் .

இவ்வாறு அடாத்தான முறையில் 7 குடும்பங்களின் 20.5 ஏக்கர் காணிகள் இதுவரை சூறையாடப்பட்டுள்ளன.

சூறையாடப்பட்டுள்ள காணிகள் தம்முடைய உறுதியுள்ள காணிகளென உரிமையாளர்களான தமிழ் மக்கள் ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளனர்.

இவ்விடயமாக கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கரைதுறைப்பற்று கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசக் கூட்டத்தில் வைத்து கரைதுறைப் பற்று பிரதேச செயலரிடம் தெரிவித்துள்ளதாகவும் இக் காணி அபகரிப்பு குறித்து தான் தொடர்ந்தும் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் ரவிகரன் மக்களுக்கு உறுதியளித்தார்.

(அ-9-6-250)

## அதிபர்களை கடன்காரனாக்கிய போஷாக்கு உணவு வழங்கும் திட்டம்

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட பாடசாலை அதிபர்களை மாணவர்களுக்கு போஷாக்கு வழங்கும் திட்டம் கடன்காரனாக்கியுள்ளதாக அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உலக உணவுத்திட்டத்தினால் இதுவரை காலமும் போஷாக்கு உணவை சமைத்து வழங்குவதற்கென ஒருவரை பாடசாலைகள் அமர்த்தியிருந்தபோதிலும் தற்போது பெற்றோர்கள் பாடசாலைக்கு வருகை தந்து சமைத்து வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் விறகை பெறுவதிலும்




சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

விறகு கொள்வனவுக்கு போதியளவு நிதி வழங்கப்படாமை மற்றும் உணவு பொருட்களை பெறுவதற்கு தேவையான நிதி இன்மையுடன் காலதாமதம் என்பனவும் அதிபர்களை பல்வேறு சிக்கல் நிலைக்கு தள்ளியுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதத்தில் இருந்து மரக்கறி மற்றும் பால் கொள்வனவுக்கு கல்வி திணைக்களத்தால் நிதி வழங்கப்படாமையினால் அதிபர்கள் கடன்காரர்களாக மாறியுள்ளதுடன் கல்வித்திணைக்களத்திற்கு அறிவித்தல் வழங்கியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இது தொடர்பில் வட மாகாண கல்வி அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் வவுனியா மாவட்ட அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ -9-266)

# வவுனியாவில் கோஷ்டி மோதல்கள் அதிகரிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியாவின் பல பகுதிகளில் அண் மைக் காலமாக கோஷ்டி மோதல்கள் அதிக ரித்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக வைரவபுளியங் குளம், பண்டாரிகுளம், தோணிக்கல், தேக்க வத்தை, குட்செட் வீதி, உக்குளாங்குளம் போன்ற பகுதிகளிலுள்ள இளைஞர்கள் கோஷ்டி மோதல்களில் ஈடுபட்டுவருவதுடன் சிலர் காயமடைந்து வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதன்படி அண்மையில் வைரவபுளியங் குளம் பகுதியில் தனியார் கல்வி நிலையத்திற்கு தனது மகளை ஏற்றச்சென்ற பெற்றோர் ஒருவரையும் இளைஞர் குழுவொன்று தாக்கியதுடன் வாடி வீட்டு உரிமையாளரான மா. கதிர்காமராசா மீதும் கத்தியால் வெட்டி இளைஞர் குழுவொன்று காயப்படுத்தியிருந்தது.

குறிப்பாக தனியார் கல்வி நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் மாலை வேளை யில் கூடும் இக் குழுக்கள் கல்வி கற்க வரும் மாணவிகளுக்கு பல்வேறு வகையிலும் இடையூறுகளை ஏற்படுத்துவதுடன் தகாத வார்த்தை பிரயோகங்களையும் மேற்கொள்வதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வவுனியாவில் அதிகரித்துள்ள இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ள போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என ஆதங்கத்தை வெளிப் படுத்தும் சமூக ஆர்வலர்கள் பொலிஸாரின் அசண்டையீனமே இளைஞர் குழுக்கள் வீதியில் நிற்பதற்கும் கோஷ்டி மோதலில் ஈடுபடவும் காரணம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் உ்ரிய கவனமெடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-266)

## குளிரூட்டி வாயு சீராக்குநர் பயிற்சி நெறி

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயத்தின் முறைசாராக் கல்வி பிரிவினால் குளிரூட்டி வாயு சீராக்குநர் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

NVQ மட்டம் 3 தேசிய சான்றிதழ் பயிற்சி நெறியான இக் [illegible] விரும்புவோர் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் உள்ள முறை[illegible]டன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (அ-9-266)

# மரண அறிவித்தல்

## அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை



புத்தூர் கிழக்கு புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி செல்லத்துரை நேற்று முன்தினம் (13.02.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பார்வதியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி- பொன்னம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான மயில் வாகனம்- சின்னம்மா தம்பதியினரின் மருமகனும், செல்வசீலன் (லண்டன்), செல்வபவன் (கனடா), செல்வரஜனி, செல்வதீபன் (நீதவான் நீதிமன்றம்,சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ் சென்றவர்களான ரோகிணி (பவானி), இராசம்மா மற்றும் சின்னத்துரை (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், உணவுத் திணைக்களம்), சிவநேசன் (சட்டத்தரணி), சிவராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கார்த்திகேயன் (ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி), ஜெயந்தி (லண்டன்), மலர்விழி (கனடா) ஆகியோரின் மாமனாரும், டிவானி, சாகித்தியா, கஸ்ரன், சஸ்மிதா,அஸ்வின்,அக்சியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வும்.

**புத்தூர் கிழக்கு, [illegible]பிரான் வீதி, புத்தூர்.**

(5598)

**தகவல்: குடும்பத்தினர். 0779596667**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு வெங்காயப் பயிருக்கு நடந்தது என்ன?

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 47-I



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இடைக்காட்டு விவசாயிகளின் குறிப்பாக சி.வே.குமாரசுவாமிகளது அவசரமானதும் அவசியமானதுமான வேண்டுகோளின் பேரில் இக்கட்டுரை அமைகின்றது. யாழ்ப்பாணத்தின் இடைக்காட்டு பகுதி விவசாயிகள் காலங்காலமாக சின்ன வெங்காய செய்கையில் ஈடுபட்டு வருபவர்கள். இவர்களின் தன்னம்பிக் கையும் விடாமுயற்சியுமே சின்ன வெங்காய உற்பத்தியில் சிறப்பாக ஈடுபட முடிந்திருக்கின்றது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட காலநிலை மாற்றத்தின் விளைவாக மழை தப்பிதமாக காலம் மாறி அளவுக்கதிகமாக பெய்ததனால் வெங்காயப் பயிரில் நோய்த்தாக்கம் ஏற்பட்டு பயிர் முழுவதுமாக அழுகலடைந்துவிட்டது.



பாதிக்கப்பட்டுள்ள வெங்காயப் பயிர்

போதாக்குறைக்கு அறுவடையின் போதும் தப்பிய வெங்காயப் பயிரில் மழை பெய்ததனால் அறுவடையின் பின்னர் அவற்றை கத்தையாக்கி சேமிப்பிலிட்ட போது அதிகளவு ஈரப்பதனின் காரணமாக சேமிப்பில் இட்ட வெங்காயமனைத்தும் அழுகலடைந்து நட்டப்பட வைத்துவிட்டது.

பாரம்பரியமாககத்தை கட்டும் முறையை மாற்றி இலகுவாக கத்தையாக்கும் முறையினைக் கடைப் பிடித்ததால் வெங்காயமனைத்தும் கத்தையினுள் உள்ளகப்பட்டதனால் ஏற்கனவே விளைநிலத்தில் தொற்றியிருந்த பூஞ்சணங்களனைத்தும் ஈரப்பதன் கத்தையினுள் அதிகமாயிருந் ததனால் இலகுவாகப்பரவி கத்தையனைத்தும் அழுகலாகி வெங்காயத்தின் உருவமே மாறிவிட்டது. அதிகளவு செலவாக போனதால் வெங்காயச் செய்கைகடந்த வருடம் நட்டத்தையே ஏற்படுத்தியிருந்தது.

கடந்த வருடத்தில் வெங்காய செய்கையில் பாதிப்பையேற்படுத் தியிருந்த காரணிகளை அறிந்து வைப்பது வெங் காய செய்கையிலீடுபடும் விவசாயிகளுக்கு உதவியாயிருக்கும். நோய் முற்றிய பின் அதனை தீர்ப்பது என்பது இலகுவான காரிய மல்ல.

விவசாய பெரு மக்கள் எதிர்பார்ப்பது போல அனைத்து பூச்சிநாசினிகள் பங்கசு நாசினி களையும் பயன்படுத்தி விட்டு நோய் குணமாக வில்லையென்பது பொருத்தபபாடானதாக இல்லை. காலநிலையின் தன்மைக்கேற்ப பூஞ்சண தொற்றுக்களின் தன்மை மாறுபடு கின்றது. ஒவ்வொரு பூஞ்சணத் திற்கும் ஏற்ற பூஞ்சண நாசினிகளையே பயன்படுத்த வேண்டும். அனைத்து பூஞ்சண நாசினிகளையும் மாறி மாறி பயன்படுத்துவதனால் குறித்த பூஞ்சணம் கட்டுப்படப் போவதில்லை.

மேலும் பூஞ்சணத்தொற்றுக்கு ஏதுவான சூழல் அமையும் போது எந்தவித பூஞ்சண நாசினியையும் விசிறினாலும் அந்த பூஞ்சணத்தை கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் பயன்படுத்தும் பூஞ்சண நாசினிக்கு இயைவாக்கமடைந்து அந்தப் பூஞ்சணம் தப்பிப் பிழைக்க வாய்ப்புக்கள் அதிகம். அதனுடன் ஒவ்வொருவர் வெங்காய விளை நிலத்திலும் இருக்கின்ற சூழல் குறிப்பாக ஈரப்பதன் இன்னும மிகவும் குறைந்த இரவுநேர வெப்பநிலை இவையனைத்தும் பூஞ்சணங்களின் தொற்று தலையும் பரவு தலையும் இலகுவாக்கி விரைவாக்கி விடு கின்றது.

தற்போது என்றுமில்லாதவாறு பனி இரவில் அதிகமாக இருப்பது இரவுநேர வெப்ப நிலையை வெகுவாக குறைத்து பூஞ்சண தொற்று விரைந்து ஏற்பட காரண மாயிருக்கின்றது. இது பற்றிய விளக்கம் விரிவாக விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது புரிகின்றது. இதற்கான ஏற்பாட்டை இடைக்காட்டு விவசாய சம்மேள னத்துடன் இணைந்து செய்தல் வேண்டும்.

இம்முறை பிரச்சினை வேறுபக்கமாக வந்திருக்கின்றது. வழக்கமாக பெய்ய வேண்டிய மழை காலந்தாழ்த்தி பெய்திருக்கின்றது. அதனால் காலபோகத்து வெங்காயப் பயிர்ச் செய்கை பின்தள்ளப்பட்டிருக்கின்றது. இடைக்காட்டு விவசாயிகள் பொதுவாக டிசெம்பர் மாதம் கடைசிப்பகுதியிலேயே நடவு செய்திருக்கின்றனர்.

அன்றிலிருந்து மழை பெய்து விவசாய செயகைக்கு உகந்ததாகவே இருக்கவில்லை. இது ஒருபக்கமிருக்க தற்போது இரவு நேரத்து பனிப்பொழிவு அதிகமாகவும் வழமைக்கு மாறாக அதிகமாகவுமிருப்ப தனால் இரவு நேர வெப்பநிலை வழமைக்கு மாறாக மிகவும் குறைவடைந்திருக்கின்றது. இந்த மாற்றத்தை அனைவரும் உணரக்கூடிய தாக இருக்கும். காலநிலையிலேற்பட்ட இந்த எதிர்பாராத மாற்றம் வெங்காயப் பயிரை மட்டுமல்லாது ஏனைய பயிர்களையும் பாதித்திருக்கின்றது.

தங்களது விளைநிலத்தில் காணப்படும் களைகளில் பூஞ்சண தொற்று அதிகமாக இருப்பதை நங்கள் தற்போது அவதானிக்க முடியும் (படம் 1). இவ்வாறான பூஞ்சண தொற்று களைகளில் காணப்படுவது எமக்கான அவசரமான குறியீடாக நாம் கொள்ள வேண்டும். இவ் வகை தொற்றுக்கள் காணப் படுமிடத்து வெங்காயப் பயிருக்கு அதிகளவில் நீர்ப்பாசனம் செய்யக்கூடாது. அதே நேரத்தில் வெங்காயப் பயிர் நிலத்தை காயவிடவும் கூடாது.

இது அனுபவத்தினூடாக செய்ய வேண்டியதாகும். மேலும் வெங்காயப் பயிரை நடுகை செய்யும் போது ரைக்கோடேர்மா கரைசலில் தோய்த்தெடுத்து நடுவது அவசியம். அசேதன பூஞ்சணநாசினிகளால் அனைத்து பூஞ்சணத் தொற்றையும் கட்டுப்படுத்த முடியாதென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட விவசாய பெருமக்களின் வெங்காய பயிர் சிறியளவில் பாதிப்புற்றமைக்கு அவர் தமது நிலத்தில் மேற்கொண்ட பயிர்ச் செய்கை முறை காரணமாகும். அவரவர் விளைநிலத்தின் தன்மை மாற்றமிருந்தாலும் பாதிப்பு குறைவாக உள்ள விவசாயியின் செயன் முறைகளை மற்றையவர்கள் கடைப் பிடிப்பது நல்லது.

விவசாய பெருமக்கள் பயன்படுத்திய பூஞ்சண நாசினிகள் தனித்துவமானவை. ஆதலால் ஒவ்வொன்றினதும் பரவலுக்கேற்ப, வீரியத்திற்கேற்ப பூஞ்சணநாசினிகளை பயன்படுத்த வேண்டும். மேலும் பயன்படுத்திய பூஞ்சண நாசினிகளின் வீரியத்திலும் பிரச்சினையுள்ளதாக தெரிகின்றது. 2008ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பூஞ்சண நாசினி 2014ஆம் ஆண்டுக்கு பயன்படுத்துவதற்கு ஏற்றதல்ல.

விரிவாக விவசாய பெருமக்களுடன் கலந்தாலோசித்து இதற்கான காரணத்தையும் தீர்வையும் காணவேண்டும்.

தொடரும்...

# பயங்கரவாதத்தை தோற்கடித்ததன் பலனை மக்கள் அனுபவிக்கின்றனர்

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

**பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பயனை மக்கள் அனுபவிக்கின்ற தற்போதைய சூழலில் அதற்கான எதிர் பிரதிபலன் தமக்கு ஜெனீவாவிலிருந்து வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மக்கள் வங்கிக்கு ஆயிரம் பேரை புதிதாக இணைத்துக் கொள்ளும் நகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அவர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில,

இத்தகைய எதிர்ப்புகளை எதிர் கொள்ள நேரும் போதும் பயங்கரவாதத்திலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்டமை பெரிதெனக் கருத முடிவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டிருககாவிட்டால் நாட்டில் இன்றைய நிலையைக் கட்டியெழுப்ப முடிந்திருக்காது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

முப்பதுவருடயுத்தத்தைமுடிவுக்குக் கொண்டுவந்ததன் பிரதிபலன்களை இப்போது மக்கள் அனுபவித்து வருகன்றனர். வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் இளைஞர்கள் கொழும்புக்கு வந்து நியமனம் பெற்றுச் செல்வதற்கும் அதுவே வழிவகுத்தது.

பயம் சந்தேகமின்றி அனைத்துப் பிரதேச மக்களும் கொழும்புக்கும் ஏனைய பிரதேசத்துக்கும் செல்லக் கூடிய நிலை இன்றுள்ளது. 30 வருட பயத்தை நாம் இல்லாமல் செய்துள்ளோம். அதன்பிரதிபலனே இன்றைய இந்த சிறந்த சூழல்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருக்காவிட்டால் இத்தகைய சூழ்நிலையை எம்மால் கட்டியெழுப்பியிருக்க முடியாது. மக்கள் அதன் பிரதிபலன்களை அனுபவிக்கும் நிலையில் எமக்கும் அதன் பிரதிபலன் ஜெனீவாவிலிருந்து வருகிறது. அத்தகைய பிரதிபலனுக்கு நாம் முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. நாட்டுக்குநல்லதுநடந்துள்ளதுஎன்பதால்நாம் அதைப் பொருட்படுத்தவில்லை.

மக்களுக்கான சுதந்திரத்தையும் நாட்டிற்கான சுதந்திரத்தையும் பெற்றுக் கொடுக்க முடிந்ததை நாம் பெரிதாகக் கருதுகிறோம். நாடு துண்டாடப்படாமல் பயங்கரவாதத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களை இல்லாதொழிக்க முடிந்துள்ளமையை விட எமக்கெதிரான செயற்பாடுகள் பெரிதாக தெரியவில்லை.

நாட்டில் வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற பேதம் இப்போதில்லை. நாட்டின் அனைத்துப் பிரதேச மக்களும் சமத்துவமாக வாழ்கின்றனர். அத்தகைய பேதங்கள் நாட்டில் இல்லை. எங்கும் எவரும் வாழக் கூடிய உரிமையையும் தொழில் செயயக்கூடிய உரிமையையும் நாம் பெற்றுக்கொடுத்துள்ளோம். சுதந்திரமாக வாழ, கல்வி, சுகாதாரம் உட்பட அனைத்து மக்களுக்கும் சகல உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின ஆட்சிக் காலத்தில் அமைச்சராகவிருந்த டி. பி. இலங்கரத்னவினால் கொண்டுவரப்பட்ட சட்ட மூலத்தின் மூலம் மக்கள் வங்கி ஆரம்பிக்கப் பட்டது. அதற்கு முன்னர் இருந்த வங்கி களில் ஏகாதிபத்தியவாதிகளின் நிர்வாகமே இருந்தது. ஆங்கிலததில் மட்டுமே அது தொழிற்பட்டது.

கிராமிய மக்கள் பயனடையும் வகையில் அவர்களின் விவசாயம, கைத்தொழில்களுக்கு கைகொடுக்கும் வகையில் அவர்களுக்கான கடன்களை வழங்கும் பாரிய எதிர்பார்ப்புடனேயே மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னரே சிங்களத்திலும் தமிழிலும் அலுவல்களை நிறைவேற்றிக்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

எந்த உத்தரவாதமுமின்றி கோடிக் கணக்கில் வங்கியின் பணத்தைக் கடனாக வழங்கிய யுகம் இது. அதற்கான உத்தரவும் துண்டுக் கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டன. தொலைபேசி மூலம் கலந்துரையாடி இவ்வாறு கோடிக்கணக்கில் கடன் வழங்கிய யுகம் அது. வங்கிகளுக்கு அதனால் இன்றும் பிரச்சினையே. கிராமிய மக்களுக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அரச வங்கிகளின் பணம் இவ்வாறே உபயோகப்படுத்தப்பட்டது.

நாம் இந்நிலையை மாற்றியுள்ளோம் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். வடக்கு, கிழக்கு உட்பட தமிழ் இளைஞர்,யுவதிகளும் பெருமளவில் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் ஜனாதிபதி தமிழில் உரையாற்றுகையில், மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி என்பதால் இதில்பணிபுரிபவர்களும்பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

720

# அறிவுரை

தகடூர் என்ற கிராமத்தில் தங்கப்பன் தான் கிராம அதிகாரி. அவன் எந்த விடயத்திலும் அந்த ஊரின் பண்பட்டும் அறிஞருமான நீலகண்டரின் அறிவுரைகேட்டு அதன்படி நடந்து வந்தான். நீலகண்டரும் யாராவது தவறு செய்தால் அதை ஏன் செய்தார் என்று நன்கு யோசித்து தக்க தண்டனை கொடுப்பது பற்றி கிராம அதிகாரியிடம் கூறுவார். கிராம அதிகாரியும் அந்த அறிவுரைப்படி நடப்பான். அதுபோல ஊரில் ஒருவர் ஒரு நற்செயலைச் செய்தால் அதைப் பாராட்டிப் பரிசு அளிப்பதானால் அதனால் என்ன பயன்கள் விளையும் என அவர் யோசித்த பிறகே கிராம அதிகாரிக்கு அறிவுரை கூறுவார்.


அந்த ஊரில் முருகையன் என்ற கிழவன் இருந்தான். அவன் திடீரென நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவன் சம்பாதித்துத்தான் தன் மகன் மருதனை வளர்த்து வந்தான். மருதன் சோம்பேறி. எந்த வேலையிலும் நாட்டம் கொள்ளாத இளைஞன். தன் தந்தையின் நிலை கண்டு அவன் சாப்பாட்டிற்காக வீடு வீடாகப் போய் பிச்சை எடுக்கலானான்.

அவன் நீலகண்டரின் வீட்டிற்குப் போய் பிச்சை கேட்ட போது அவர் "நீ ஏன் ஏதாவது வேலை செய்து உன் தந்தைக்கு சாப்பாடு போடக்கூடாது? இவ்வளவு நாட்களாக அவன் வேலை செய்து உனக்குச்சாப்பாடு போட்டு வந்தால் தானே நீ சோம்பேறியாக ஊரில் திரிந்து கொண்டு இருந்தாய்? பிச்சை எடுப்பது பெருங் குற்றம். நீயோ வேலை செய்யாமல் பிறர் உழைப்பால் கிடைப்பதைச் சாப்பிட விரும்புகிறாய். இது குற்றம். நீ முதல் தடவையாகச் செய்ததால் தண்டிக்காமல் விட்டுவிடுகிறேன். ஆனால், இன்னொரு முறை இதைச் செய்தால் கிராம அதிகாரியிடம் சொல்லி உன்னைச் சிறைக்குள் தள்ளுவேன்" என்றார். அதைக் கேட்ட மருதன் பயந்து போய் ஊரை விட்டே ஓடிவிட்டான்.

அதனால் அவனது தந்தை முருகையன் அநாதையாகிவிட்டான். அப்போது நீலகண்டர் கிராம அதிகாரியிடம் நடந்ததைக் கூறி "கிராமத்தின் அநாதைகளையும் உடல் ஊனமுற்றவர்களையும் பராமரிக்க வேண்டியது கிராம அதிகாரியின் கடமை. எனவே முருகையனை இந்த கிராமத்தவர் முறைபோட்டுக் கொண்டு கவனித்து வரவேண்டும் என கட்டளை இடுங்கள்" என்று யோசனை கூறினார். கிராம அதிகாரியும் அதுசரி என எண்ணி அவ்வாறு கட்டளையும் பிறப்பித்தான்.

அந்த ஊரில் காலன், மாலன், வேலன் என்ற மூன்று இளைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் போக்கிரிகள். அவர்கள் கிராம அதிகாரியிடம் "எங்களுக்கு வேலை கொடுங்கள். அப்போதுதான் எங்கள் பெற்றோர்களைக் காப்பாற்ற முடியும். வேலை கொடுக்காவிட்டால் நாங்கள ஊரைவிட்டே போய் விடுவோம். அப்போது எங்கள் பெற்றோரை பராமரிக்கும் பொறுப்பு உங்கள் மீது தான்விழும்" என்றார்கள்.

இதே சமயம் அவர்கள் சொன்னதைக் கேட்டுக்கொண்டே வந்த நீலகண்டர் "இவர்களை ஊரிலிருந்து போய்விட அனுமதித்து விடு. இவர்களது பெற்றோர்களை கவனித்துக்கொள்ள ஏற்பாடு செய்வோம்" என்றார். அதைக் கேட்டு அந்த மூன்று போக்கிரிகளும் சிரித்துக் கொண்டே அந்த ஊரிலிருந்து வெளியேறினார்கள். நீலகண்டரும் கிராம அதிகாரியிடம், "கவலைப்படாதீர்கள். அவர்கள் மட்டும் அல்ல, மருதனும் விரைவில் திரும்பி வந்து தம் பெற்றோர்களை கவனித்துக் கொள்ளத்தான் போகிறான்" என்றார். இதற்குப் பிறகு யாரும் வந்து கிராம அதிகாரியிடம் எவ்விதப் புகாரும் செய்யவில்லை.



சில நாட்களுக்குப் பிறகு தகடூர் கிராம அதிகாரி தங்கப்பனுக்கு காலனும் மாலனும் வேலனும் மருதனும் கோட்டூரில் வேலை செய்து பணம் சம்பாதித்து வருகிறார்கள் என்று தெரிந்தது. ஆனால் அவர்கள் தங்கப்பனைப் பற்றி அவதூறாகப் பேசித் தூற்றி வருகிறார்களாம்.

அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்று பார்க்க தங்கப்பன் ஆவல் கொண்டான். தங்கப்பன் தன் வண்டிக்காரன் வரதனிடம் "வரதா! நம் வில் வண்டியைக் கட்டிக் கொண்டுவா. நாம் கோட்டூர் போகலாம்" என்றான். வரதனும் வண்டியைப் பூட்டிக்கொண்டு வந்து நிறுத்தவே தங்கப்பன் அதில் ஏறி உட்கார்ந்தான். வரதன் வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றான்.

கோட்டூர் தகடூரிலிருந்து ஐம்பது மைல் தூரத்திலிருந்தது. போகும பாதையோ கரடு முரடானது. அதில வேகமாகப் போய்க்கொண்டிருந்த வில்வண்டி ஒரு பாறாங்கல்லின் மீது ஏறி குடை சாய்ந்தது...

தொடரும்



## 02.2014 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கிமு 399 - மெய்யியலாளர் சாக்கிரட்டீஸ் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டார்.
- 590 - பாரசீகத்தின் மன்னனாக இரண்டாம் கொஸ்ராவு முடி சூடினான்.
- 1637 - புனித ரோம் பேரரசின் மன்னனாக மூன்றாம் பேர்டினண்ட் முடி சூடினான்.
- 1898 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படைக் கப்பல் USS Maine கியூபாவில் அவானா துறைமுகத்தில் வெடித்து மூழ்கியதில் 260 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். இந்நிகழ்வையடுத்து அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.
- 1920 - யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் ஜப்பானிடம் வீழ்ந்தது. கிட்டத்தட்ட 80,000 இந்திய, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஆஸ்திரேலியப் படையினர் போர்க் கைதிகளாகப் பிடிபட்டனர்.
- 1946 - ENIAC என்ற முதல் தலைமுறைக் கணினி அறிமுகமானது.
- 1950 - சோவியத் ஒன்றியம், மக்கள் சீனக் குடியரசு ஆகியன பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1989 - ஒன்பது ஆண்டு கால ஆக்கிரமிப்புக்குப் பின் ஆப்கானிஸ்தானிலிருந்து அனைத்து சோவியத் படைகளும் வெளியேறியதாக அறிவிக்கப்பட்டது.
- 1994 - ரஷ்யா தார்த்தஸ்தானை ஒரு உட்குடியரசாக இணைத்துக் கொண்டது. தார்த்தஸ்தானின் விடுதலைக்கான போர் ஆரம்பமானது.
- 1999 - குர்டிஸ்தான் தீவிரவாதத் தலைவர் அப்துல்லா ஒக்கலன் துருக்கிய இரகசியப் படைகளினால் கென்யாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.
- 2005 - யூடியூப் சேவை ஐக்கிய அமெரிக்காவில் ஆரமபிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1564 - கலீலியோ கலிலி, இத்தாலிய வானியலாளர், இயற்பியலாளர் (இ. 1642)
- 1861 - ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட், பிரித்தானியக் கணிதவியலாளர் (இ. 1947)
- 1861 - சார்ல்ஸ் கில்லோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர், (இ. 1938)
- 1873 - ஹான்ஸ் இயூலர்-செல்ப்பின், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1964)
- 1922 - டி. பி. விஜயதுங்கா, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி
- 1956 - டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ், மேற்கிந்தியத் தீவுகள கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாளர்.

### இறப்புகள்

- 1973 - அழகு சுப்பிரமணியம், ஆங்கில எழுத்தாளர். இலங்கையர். (பி. 1915)
- 1988 - ரிச்சார்ட் பெயின்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர். (பி. 1918)
- 1996 - [illegible] நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர். (பி. 1926)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாக்கிரட்டீஸ்



சாக்கிரட்டீஸ் ஏதென்சைச் சேர்ந்த ஒரு மெய்யியலாளர் (தத்துவ ஞானி) ஆவார். இவர் மேற்கத்திய தத்துவ மரபின் முக்கியமான சின்னமாகத் திகழ்பவர்களுள் ஒருவர்.

இவருடைய சீடர் பிளேட்டோவும் புகழ்பெற்ற தத்துவஞானி ஆவார். கிரேக்க நாட்டின் தத்துவஞானி என்றும், உலகத்தின் முதல் தத்துவ ஞானி என்றும் இவர் போற்றப்படுகிறார். மதவாதிகளை நோககி "கடவுள் என்பவர் யார்?" எனக் கேள்வி கேட்ட முதல் பகுத்தறிவாளர், இவர் தான். சிறுவனாக இருந்தபோதே இவர் கேள்விகள் கேட்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். எதைப் பற்றியும் கேள்வி கேட்டு, அது பற்றிய உண்மையை அறிந்துகொள்வதே இவரின் வழக்கமாகும். நீதி, நியாயம், ஆத்மா, கடவுள், சமூகம், அரசு. சம்பிரதாயம் என எல்லாவற்றையும் ஆய்வுக்கு உட்படுத்தினார் சாக்ரடீஸ். இவரின் இந்தக் கேள்வி கேட்கும் முறை ஏதென்ஸ் நகர இளைஞர்களைக் கவர்ந்தது. அவரின் கேள்வி கேட்கும் பழக்கம் இளைஞர்களிடமும் தொற்றிக்கொண்டது. கிரேக்க சமூகத்தில் காலகாலமாக கடைப்பிடித்து வந்த மூடக்கொள்கைகளையெல்லாம் இவரை சிந்திக்க வைத்ததல்லாமல், மெல்ல இளைஞர்களையும் மாற்ற ஆரம்பித்திருந்தது. இது ஏதென்ஸ் அரசுக்கு தெரியவந்தது.

சாக்ரடீஸ் இருக்குமிடங்களில் எப்போது இளைஞர்கள் கூட்டம் சூழ்ந்திருப்பது சிலருக்கு எரிச்சலைத் தந்தது. சாக்ரடீஸ் தினம்தோறும் இளைஞர்களிடம் உரையாடியது கிரேக்க ஆட்சியாளர் களை கோபப்படுத்தியது. அவர் மீது கடும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இளைஞர்களைத் தூண்டி விடுவதாகவும், மத எதிர்ப்பை எழுப்பி விடுவதாகவும், தனக்குப் பெருமை சேர்ப்பதற்காக சாக்ரடீஸ் தவறான வழிகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்காகவும், அதன் வழியாக ஏதென்ஸ் அரசுக்கு ஆபத்தை விளைவிப்பதாகவும் சாக்ரடீஸ் மீது அனிடஸும், லைகோனும், மெலிட்டஸும் குற்றம் சுமத்தி வழக்குத் தொடுததனர். இதன்போது நீதிமன்றத்தில் தர்ப்பு கூறும் தருணம் வந்தது . மரணம், மன்னிப்பு என்ற இரண்டு பெட்டிகள் வைக்கப்பட்டன . நீதிக் குழுவின் உறுப்பினர்கள் 501பேர் வாக்குப் பதிவு செய்யத்தொடங்குகின்றனர். 220 பேர் சாக்ரடீஸை மன்னித்து விடுமாறும் 281 பேர் மரண தண்டனை அளிக்கவும் வாக்களித்தனர். நீதிபதிகள் சாக்ரடீஸ் குற்றவாளி தான் என்று தீர்ப்புக்கூறி அவருக்கு விஷம் கொடுத்துக் கொல்ல வேண்டும் என்று கி.மு. 339 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி நீதிபதிகள் உத்தரவிட்டனர.

# சதுரகிரி சித்தர்கள்

...மூவரின் குரலையும் கேட்ட அனுசுயை வெளியில் வந்து வணங்கி, அவர்களை உள்ளே அழைத்து அமரச் செய்து, அறுசுவை உணவு களைத் தயாரித்து உண்ண அழைத் தாள்.

அப்போது அம்மூவரும், நாங்கள் நிருவாணிகளிடத்து தான் பிச்சை கொள்வோம் என்று கூற, அதனைக் கேட்ட அனுசுயை அச்சொல்லின் பொருளையறியாது மயங்கித் தன் செவிகளைப் பொத்திக் கொண்டாள்.

இதென்ன சோதனை. இத்தகைய வார்த்தைகளைக் கேட்க நான் என்ன பாவம் செய்தேனோ என்று வருந் தியவளாய், தன்னுடைய கற்பின் திறத்திற்குப் பங்கம் வராமலும் அதே சமயம் அவர்களின் விரதத்திற்கும் பழுது வராமலும் நடந்துகொள்ள தீர்மானித்தவளாய், தன் மனதினுள் தன் கணவரை நினைத்து அவரது பாத தீர்த்தத்தைக் கரத்திலேற்றி, என் முன்பாக நிற்கும் இம்மூவரும் குழந் தைகளாகுக என்று உரைத்து, அத் தீர்த்தத்தை அவர்கள் மேல் தெளிக்க, உடனே மும்மூர்த்திகளும் கிழப்பரு வம் நீங்கி சிறுகுழந்தைகளாகி பசிக்கு அழ, அனுசுயையும் தன் உடைகளைக் களைந்து நிர்வாண நிலையிலேயே அக் குழந்தைகளுக் குப் பாலூட்டினாள். பின்னர் அம்மூன்று குழந்தைகளையும் தம் குழந்தைகள் போலவே நீராட்டி, சீராட்டி வளர்த் தும் வரலானாள்.

இப்படி இருக்குங்காலத்தில் மும் மூர்த்திகளின் மனைவியரும் தம் நாயகர்களைக் காணாது தேடி வருகை யில், வழியில் எதிர்ப்பட்ட நாரதர் நடந்த விடயங்களை அவர்களிடம் கூற தம் கணவர்களை மீட்க அத்திரி முனி



மும்மூர்த்தி

வரது ஆசிரமத்தை அடைந்தனர்.

மூன்று தேவியரையும் வரவேற்ற அனுசுயை, அவர்கள் வந்த காரணத் தையும் வினவினாள். அவர்களும் தங்கள் கணவன்மார்கள் அவளால் குழந்தைகளாக்கப்பட்ட விபரத்தைக் கூறி அவர்களைச் சுய உருவத்துடன் தங்களிடம் ஒப்படைக்கும்படி வேண்டி னர்.

மும்மூர்த்திகளே என்னிடம் பிச்சை கேட்டு வந்தனர் என்றால் என்னே எனது பாக்கியம்? என்று அனுசுயை சந்தோச மடைந்த வேளையில், வெளியே சென்றிருந்த அத்திரிமகரிஷியும் தமதாசி ரமத்திற்கு வந்தார். தம் குடிசையில் மூன்று தேவி யர்களும் ஒருசேர வந்தி ருப்பதன் காரணத்தைக் கேட்க, அனுசுயையும் நடந்த விடயங்களைக் கூறினாள்.

அனுசுயை, நிருவா ணம் என்பது உடல் நிருவா ணம் அல்ல; அது மன நிருவாணம். மனதில் அனை த்து இச்சைகளையும் நீக்கி விட்ட பரிபூரண நிலை. மோட்ச இச்சையை உடை யவர்கள் மட்டுமே நிரு வாணிகள். இதன் முழுப் பொருளை அறியாததால் இவ்வாறு செய்யத் துணிந்தாய். இனி இக் குழந்தைகளை முன்போலாக்கி அவர்களுடைய மனைவியராகிய மூவரையும் நீ மகிழ்விப்பாயாக என்று கட்டளையிட, அனுசுயையும் தன் அறியாமைக்கு வருந்தி, அவர் சொன்ன வண்ணமே செய்தாள்.

சுய வடிவத்தை அடைந்த மூவரும் அனுசுயையின் கற்பின் திறத்தைப் புகழ்ந்து அவர்களின் இல்லறமும், துறவறமும் சிறக்க வேண்டும் என பல வரங்களை அளித்து தம் தேவியரு

## ஆன்மீகம் 34

டன் தமதிருப்பிடம் சேர்ந்தனர்.

அத்திரி மகரிஷி ஆசிரமம் இருந்த இடத்தைக் கண்டதும் இக் காட்சிகள் தான் என் மனத்திரையில் ஓடின. மும் மூர்த்திகளையும் குழந்தைகளாக்கிய மாபெரும் பத்தினி அனுசுயை இல்ல றம் நடத்திய தவச்சாலை இன்று இல்லை என்றாலும் அந்தத் தவச் சாலை இருந்த இடத்தைத் தொட்டு வணங்கினேன்.

மும்மூர்த்திகளும் குழந்தைகளாய்த் தவழ்ந்த புனித இடத்தைத் தொட்டு கண்களில் ஒத்திக் கொண்டோம். அத்திரி மகரிஷி தவம்செய்த பெரிய பாறைக்கும் ஒரு கும்பிடுபோட்டு விட்டுத் திரும்பும்போது என்னுடன் வந்த நண்பர்கள் வெகுதூரம் சென்றி ருப்பது தெரியவந்தது. துணைக்கு வந்த இரு இளைஞர்களும் அத்தி ஊற்று வரை அழைத்து வந்து விட்டு விட்டு, மேலே கூட்டத்துடன் கூட்டாமா கக் கலந்துவிட்டனர். அதற்குப் பிறகு அவ்விளைஞர்களை மறுபடி யும் எங்கும் காண முடியவில்லை. பயணத் தைத் தொடருகிறோம் *(தொடரும்)*

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

**46**

எனக்கு ஆங்கிலப் பழமொழி நினைவுக்கு வந்தது. அனுபம் என்பது தங்கச் சிப்பு. அது, தலையில் முடி உதிர்ந்த பிறகுதான் கிடைக் கும் என்பது.

நான் புறப்படும் போது "இந்தப் படத்துக்கு அட்வான்ஸை பணமாக தரலே. ஒரு பொருளா தர்றேன். போயிட்டு நாளைக்கு ஆபீஸ் வாரும்" என்று சொன்னார் செம்மல்.

சஸ்பென்ஸ் என்பது பழகிப் போன விடயமாதலால் வீட்டுக்குப் போய் விட்டேன்.

### பரிபூரணம்

ஒரு துறையில் பூரணத்துவம் அடைந்தவர் ஆண் என்றால் அவரு க்கு பரத் பட்டம் கொடுப்பதும் பெண் என்றால் ஊர்வசி பட்டம் கொடுப்பதும் மத்திய அரசின் வழக்கம்.

ஆங்கில எழுத்துக் கோர்வையில் பரத் என்று இருப்பதை பலர் பாரத் என்றே உச்சரித்தனர்.


பரத் என்றால் பூர்த்தி எனப் பொருள். சாதாரணமாக ஒன்றை நிரப்புவதை பூர்த்தி பண்ணுவது என்றும் சொல்வோம்.

தமிழகத்தில் பரத் பட்டம் பெற்ற முதல் நடிகர் செம்மல்தான்.

பரத் பட்டம் வாங்கக் கல்கத்தா புறப்பட்டார் செம்மல்.

அந்தப் பட்டம் கொடுக்கப் போவ தாக செய்தி வந்ததுமே ரசிகர்கள் கூடிவிட்டனர். அன்று விழுந்தது ஆயிரம் மாலை!

புறப்படும்போது வழியெங்கும்



நடிகர் சங்கம் எம்.ஜி.ஆருக்கு நடத்திய பாராட்டு விழாவில் சிவாஜிகணேசன்

கழுத்து சுமார் பத்தாயிரம் மாலைகளை முத்தமிட்டு இருக்கும்.

ராமாவரத்தில் இருந்து விமானத் தளம் வரை மக்கள் வெள்ளம்.

பட்டம் வாங்கி திரும்பி வந்த போதும் அதைவிடப் பெரும் திரளான கூட்டம்.

சத்யா படப்பிடிப்பு நிலை யத்தில் இந்தப் பட்டம் பெற் றதற்காக ஒரு விழாவும் நடந்தது. பல பெரியவர்கள் வந்து பாரத் எம்.ஜி.ஆர். என்று வாழ்த்திப் பேசினார் கள்.


இரண்டு நாள் கழித்துச் செம்மலை அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது தான் இந்த பரத் பொருள் விளக் கம் பற்றிச் செம்மலிடம் சொன்னேன்.

அப்படியா?! அங்கேயே சொல்லியிருக்கலாமே என் றார்.

அது அவ்வளவாக உசித மாக எனக்குப் படலே என்றேன்.

"நிறைவுன்னு சொன்னீரே, எனக்கு இப்பதான் மன நிறைவு சம்பூர்ணமா படுது. அந்தப் படத்துக்கு தகுந்த பலன் கிடச்சதா நினைக் கிறேன்" என்றார் செம்மல்.

என்ன எப்படி? என்று கேட்டேன். செம்மல் சொன்னார்.



"கல்கத்தா ரசகுல்லாவுக்குப் பேர் போன ஊர். இப்ப மட்டுமல்ல, எப்பவும்.

நானும் அண்ணனும் 1936 இல் மாயா மச்சீந்திரா படத்துக்காக கல்கத்தா போயிருந்தோம். அப்ப சம்பளம் எனக்கு என்ன தெரியுமா? இருநூறு.

ஒரு மாசம் அவங்க போடுற சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கிட்டுச் சிறைபட்டு கிடந்தோம். அப்பவெல் லாம் மதறாஸ்லே ஸ்டுடியோ கிடை யாது. எனக்கு அப்ப இனிப்புன்னா உயிர். ரசகுல்லா சாப்பிட ஆசை. ஒண்ணு நாலணாதான். காசு கிடை யாது. என் ஆசையை அப்ப நிறை வேத்தினார். அதே ஊர்லே நம்ம சமையலுக்காக நியமிக்கப்பட்டிருந்த சர்வர் குல்தீப்.

நான் இப்ப போயிருந்தப்போ அதை நினைச்சேன். அந்த ஆளையும் நெனச்சேன். பட்டம் வாங்கிக்கிட்டு வெளியே வந்ததும் ஒரே கோஷம் எம்.ஜி.ஆர் வாழ்க என்று. பார்த்தா ஏகப்பட்ட கூட்டம்"........

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெனிக்பாமில் இருந்தவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர்

(கொழும்பு)

இலங்கை, மெனிக்பாம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுள்ளதாக போலி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

டாக் என்ற அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான முறையில் இந்த அறிக்கையை தயாரித்துள்ளது.

டாக் என்ற அமைப்பு மெனிக்பாம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவித்து விசேட அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த அறிக்கையை ஐரோப்பிய அரச சார்பற்ற நிறுவனமொன்றைச் சேர்ந்த ஹென்ட்ரினா பிரிஸ்கோ என்பவர் தயாரித்துள்ளார்.

பத்தாயிரம் தமிழர்களிடம் சத்தியக் கடதாசி பெற்றுக்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மூன்றாது அறிக்கை இதுவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## வின்சென் டீ போல் சபை பொதுக்கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

நவாலி புனித வின்சென் டீ போல் சபை புனித பேதுருவானவர் பந்தியின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சென் பீற்றேர்ஸ் பாடசாலையில் யேசுதாசன் ஜெயராணி தலைமையில் நடைபெறும் என செயலாளர் நீற்றா மரியநாயகம் அறிவித்துள்ளார். (அ-2)

# கம்பன் விழாவில் இன்று

கொழும்புக் கம்பன் கழகத்தின் கம்பன் விழாவின் 3 ஆம் நாள் காலை நிகழ்வுகள் 9.30 மணிக்கு தொழிலதிபர் தி.துவாரகேஸ்வரன் தம்பதியரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளது.

திருமதி ஹம்சானந்தி தர்மபாலன் கடவுள் வாழ்த்து இசைப்பார். கொழும்பு முத்தமிழ் மன்றத் தலைவர் ஆர்.வைத்தமாநிதி தலைமையுரை நிகழ்த்த தொடக்கவுரையினை எழுத்தாளர் திருமதி பத்மாசோமகாந்தன் ஆற்றுவார்.

அதனைத்தொடர்ந்து புலவர் இரா.சண்முகவடிவேல் தலைமையில் இலக்கிய ஆணைக்குழு நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வில் தன்னிகரில்லா தலைவனாய் இரா மனை ஆக்கும் பண்புகளில் தலையாயது, **ஊராண்மையே!** என ந.விஜயசுந்தரமும், **உலகநேசிப்பே!** என ச.மார்க்கண்டுவும், **ஏகபத்தினிவிரதமே!** என இரா.செல்வவடிவேலும், **காருண்யமே!** என ரி.ரெங்கராஜாவும் **இருவினை ஒப்பே!** என ஸ்ரீ.பிரசாந்தனும் **அறநிமிர்வே!** என தி.திருநந்தகுமாரும் **பணிவுடைமையே!** என வி.அசோக்குமாரும், **சகோதரத்துவமே!** என த.இராமலிங்கமும் விவாதம் செய்யவுள்ளனர்.

இன்றைய விழாவின் மாலை நிகழ்வு 4.30 மணிக்கு பா.சரண்ராஜ் குழுவினரின் மங்கல இசையுடன் ஆரம்பமாகும். இந்நிகழ்வின் மங்கல விளக்கேற்றலினை ஐ.டி.எம். நிறுவுநர் வி.ஜனகன் தம்பதியினர் ஏற்றி வைப்பர். தொடர்ந்து திருமதி. ரா.தாரணியின் கடவுள் வாழ்த்து இடம்பெறும். தலைமையுரையினை செலான் வங்கி நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.நடராஜா ஆற்றுவார். தொடக்கவுரையினை புதுவைக் கம்பன் கழகத் துணைத் தலைவர் வி.பி. சிவக்கொழுந்து நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக ''பூதங்கள் தொறும் உறைந்து....'' என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெறும். இக் கவியரங்கத்துக்கு சிதம்பரப்பிள்ளை சிவகுமார் தலைமை வகிக்கிறார். **நிலமாகக் கம்பன் வந்தால்!** என ச.முகுந்தனும் **நீராக கம்பன் வந்தால்...!** என ச.மணிமாறனும் **நெருப்பாக கம்பன் வந்தால்!** என த.ஜெயசீலனும் **காற்றாக கம்பன் வந்தால்...!** என த.சிவசங்கரும் **வானாக கம்பன் வந்தால்...!** என ஸ்ரீ. பிரசாந்தனும் கவிபாடவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர் இரா. செல்வக்கணபதி தலைமையில் உரையரங்கம் இடம்பெறும். அதில் ''பாரதியில் கம்பனைக் கண்டேன்'' என்ற தலைப்பில் த.இராமலிங்கம் அவர்களும் ''கம்பனில் பாரதியைக் கண்டேன்'' என்ற தலைப்பில் வி.அசோக்குமாரன் அவர்களும் உரையாற்றவுள்ளனர். (ந)

# குடும்பத்தை சீர்குலைத்தவருக்கு 150 இலட்சம் ரூபா அபராதம்

குடும்ப வாழ்க்கையை சீர்குலைத்தமைக்காக நபர் ஒருவருக்கு உச்ச நீதிமன்றம் 150 இலட்ச ரூபா அபராதம் விதித்துள்ளது.

திருமணமான பெண் ஒருவருடன் தகாத உறவு கொண்டிருந்த விமானப் பொறியியலாளர் ஒருவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நுகேகொடை பிரதேச வர்த்தகர் ஒருவரே இவ்வாறு நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ள உள்ளார். குறித்த வர்த்தகரின் மனைவியுடன், விமானப் பொறியியலாளர் தகாத உறவைப் பேணியதாக தெரிவிக்கப்படுகிறது.

குடும்ப ஐக்கியத்தை சீர்குலைத்தமை, திருமண வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, அநாகரீகமாக செயற்பட்டமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் குறித்த விமானப் பொறியியலாளருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்தது.

தமது குடும்ப வாழ்க்கையை சீர்குலைத்ததாகத் தெரிவித்து வர்த்தகர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.


மாவட்ட மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் அளிக்கப்பட்ட தீர்ப்பினை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. இதன்படி குறித்த விமானப்பொறியியலாளர், குறித்த வர்த்தகருக்கு 150 இலட்ச ரூபா நட்ட ஈடாக வழங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-2)

# நிறுவன தின நிகழ்வும் பட்டமளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள IIS CITY CAMPUS இன்18ஆவது நிறுவன நிறைவு நிகழ்வும் பட்டமளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இல.177, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் தலைமைக் காரியாலத்தின் பிரதான மண்டத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் கல்வியாண்டு 2013/2014இல் தமது கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் இக் கல்வியாண்டிலே சிறப்பாக செயற்பட்ட மாணவர்களுக்கான சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (செ-2)




லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற யனுஸ் சிறிதாசன் என்பவருடைய பிறந்த தினத்தையொட்டி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களுக்கு உதவும் நோக்குடன் ஒரு இலட்சம் ரூபா நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிதியை உதவும் இதயங்கள் நிறுவனம் ஊடாக வலி.வடக்கு பிரதேச சபை பிரதி தலைவர் ச.சஜீவன் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்:- உ.சாளின்)

## போதைப் பொருள் கடத்தலை தடுக்க பொறிமுறை தேவை

இலங்கைக்குள் போதைப் பொருட்கள் எடுத்து வரப்படுவதை தடுக்கும் வகையில் ஆழ்கடல் பகுதியில் தடுப்பு பொறிமுறை ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று ஐ.நாவின் போதைப் பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான அலுவலகம் கோரியுள்ளது.

ஆழ்கடல் படகுகளில் போதைப் பொருட்கள் கொண்டு வரப்படும் கப்பல்களை தடுத்து நிறுத்தும் போது அவற்றுக்கு எதிராக ஒரு நாட்டின் சட்டத்தின் கீழ் நடவடிக்கையை எடுக்க முடியாது.

எனவே, இதற்கான பொறிமுறை ஒன்றை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்துள்ளனர். (அ-2)

# வலிகாமம் வடக்குப் பகுதியில் சிங்கள குடியேற்றத்துக்கு ஏற்பாடு

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

வலிகாமம் வடக்கு இராணுவ உயர்பாதுகாப்புவலயத்திற்குட்பட்ட காங்கேசன்துறைப் பகுதியில் 5 ஆயிரம் சிங்களக் குடும்பங்களை குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

இராணுவக் குடியிருப்பு என்று ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டுள்ள பலாலி உள்ளடங்கலாகவுள்ள வலி.வடக்கில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென கூறப்பட்டபோதும் அங்கு சிங்களவர்களை குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள நிலையில் இந்தக் கூட்டத் தொடருக்கு முன்பாக வடக்கில் யுத்தம் காரணமாக சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படும் நிலையில் சிங்களவர்களை குடியேற்ற அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

இலங்கை புகைப்படப் பிடிப்பாளர்கள் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் பயிற்சிப் பட்டறையும் விரிவுரையும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை ***இல. 280, பிரதான வீதி, யாழ்ப்பாணம்*** எனும் முகவரியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் சர்வதேச விருது பெற்ற பிரதம புகைப்படப் பிடிப்பாளரும் வீடியோ கலைஞரும் விரிவுரையாளருமான சுதாகரன் சண்முகராஜாவினால் நடத்தப்படவுள்ளது. (அ-2)

# பிரித்தானிய எம்.பிக்களுடன் பிரி.தமிழர் பேரவை சந்திப்பு

இலங்கை இனவாத அரசுகளினால் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட இன அழிப்பு, போர்க்குற்ற நடவடிக்கைக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரி பிரித்தானிய பாராளுமன்ற உறுபினர்களை தொடர்ச்சியாக சந்திக்கும் நிகழ்ச்சி நிரலை பிரித்தானியா தமிழர் பேரவை முன்னெடுத்து வருகிறது.

பிரித்தானிய வாழ் அனைத்து தமிழ் மக்களும் தாங்கள் வசிக்கும் தங்கள் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நாவில் நடைபெற இருக்கும் மனிதவுரிமை கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேச விசாரணை மேற்கொள்ளபட வேண்டுமென்றும், இன அழிப்பு தொடர்பான விசாரணையை சர்வதேச சமூகம் தவிர்த்து விட கூடாது எனவும் பிரித்தானிய பிரதமருக்கு அழுத்தம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக Harrow West பகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் Gareth Thomas மற்றும் Ealing Southall பகுதி பாராளுமன்ற உறுப்பினர் Virendra Sharma ஆகியோருடனான சந்திப்பு இடம் பெற்றது. (அ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வினைத்திறன்மிக்க நேர முதலீடு பற்றிய இக்கலந்துரையாடலை யாழ். முகாமையாளர் சம்மேளனம் (JMF) மற்றும் இலங்கை பொறியியலாளர் சங்கம் வடபிராந்தியமும் (IESL) இணைந்து இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இக் கலந்துரையாடலின் சிறப்பு பேச்சாளாராக வைத்தியர் கே.குகதாசன் கலந்துகொள்வார். இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் கேட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க பிரேரணைக்கு ஆதரவாக 800 குழுக்களாம்



## கலக்கத்தில் இலங்கை!

**ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு அமெரிக்காவுக்கு சுமார் 800 குழுக்கள் வரை ஆதரவு வழங்குவதாக இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.**

மேற்கத்தைய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டதன் அடிப்படையில் தமது கருத்துக்களை ஊடகவியலாளர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணைக்கு விடுதலைப் புலிகளின் குழுக்களும் ஆதரவு வழங்குவதாக லலித் வீரதுங்க குறிப்பிட்டார்.

எனினும் இலங்கை அரசாங்கமும் அமெரிக்க பிரேரணைக்கு எதிராக தமது ஆதரவுக் குழுக்களுடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் யோசனை நிச்சயமாக ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதனை தடுக்கமுடியாது.

இந் நிலையில் இலங்கையை பொறுத்தவரை தமது நல்லிணக்க நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் என்று லலித் வீரதுங்க தெரிவித்தார்.

இந்த நல்லி ணக்க நடவடிக்கைக்கு மேலும் காலம் தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் ஏற்கனவே அமெரிக்க வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு நெருங்கியவரான ஒருவருடன் ஆலோசனைக்காக ஒப்பந்தம் செய்துள்ளது.

எனினும் இலங்கை அரசாங்கத்தினால் அந்த நிலைமைக்கு செல்ல முடியவில்லை.

அமெரிக்காவில் தம்மை சந்தித்த காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தமது மின்னஞ்சல்களை திறக்கும் போது அதில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஒவ்வொரு நாளும் ஐம்பது என்ற அளவில் குற்றச்சாட்டுக்களை காணமுடிகிறது.

எனினும் இலங்கை அரசாங்க தரப்பில் இருந்து மின்னஞ்சல்களை தாம் காண்பதில்லை என்று குறிப்பிட்டதாக லலித் வீரதுங்க தெரிவித்தார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளரை மாற்றும் கோரிக்கை தொடர்பில் உண்மை நிலவரத்தை அரசாங்கம் புரிந்து கொண்டிருக்கிறது. எனினும் அதனை உடனடியாக செய்ய முடியாதுள்ளதாக லலித் வீரதுங்க தெரிவித்தார்.

இதேவேளை மார்ச்சமாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. அமர்வை முன்னிட்டு ஐ.நா. பிரதிநிதிகள் மற்றும் ஐரோப்பா நாட்டின் தலைவர்கள், அதிகாரிகள் எனபலர் இலங்கையின் உண்மை முகத்தை தெரிந்து செல்வதற்கு வந்து சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(அ-2)

## ஓவியப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் க.பொ. த.(சா/த),(உ/த) மற்றும் தரம் 10 வகுப்புக்களில் ஓவியப் பாடத்தை பயில்கின்ற மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி முதல் பி.ப. 4 மணிவரை இல.15,றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது கலா முற்றத்தில் இடம்பெறவுள்ளது.

ஓவிய ஆசிரியர்கள், விரிவுரையாளர்களால் நடத்தப்படவுள்ள இப் பயிற்சிப் பட்டறையில் பங்கு கொள்ள விரும்பும் மாணவ, மாணவிகள் தங்களுக்கான அனுமதிகளை கலைத் தூது கலாமுற்றத்தில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (அ)

## பல்தேசிய நிறுவனங்கள் மக்களின் இரத்தமுறிஞ்சிகள்

### அமைச்சர் மைத்திரிபால குற்றச்சாட்டு

சிகரெட், மதுபானம், மருந்து பால்மா போன்றவற்றை உற்பத்தி செய்யும் பல்தேசிய நிறு வனங்கள் மக்களின் இரத்தத்தை உறிஞ்சி குடிப்பதாக சுகாதார அமைச் சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில், பால்மாவின் விலை அதிகரிக்காத போது, வர்த்தக நிறுவனங்கள் அவற்றின் விலைகளை அதிகரித்திருப்பது நாட்டிற்கு பிரச்சினையானது.

பால் மாவின் விலைகளை அதிகரிக்க போவதில்லை என அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் கூறியது பச்சைப் பொய்.

பல்தேசிய நிறுவனங்கள் நாட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சி குடிக்கின்றன.


இந்த நிறுவனங்களை இலங்கையில் மாத்திரமல்ல உலகில் எந்த நாட்டிலும் கட்டுப்படுத்துவது சிரமமானது.

நாட்டின் பிரச்சினைகளை கையில எடுத்துக் கொண்டு எதிர்க்கட்சி புதிய புதிய சொர்க்கலோக கதைகளை கூறி வருகின்றன.

எனினும் நாடு எதிர்நோக்கும் பிரச்சினையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

வாக்களிக்க போகும் அரசியல்வாதி யார்? அந்த கட்சியின் தலைவர்கள் யார்? என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றார். (அ-2)





துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திசைகாட்டி நிறுவனத் தலைவரும் பாடசாலையின் பழைய மாணவருமான எஸ். செல்வராஜா உரையாற்றுவதையும் வெற்றியீட்டிய மாணவரொருவருக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் எஸ்.சிவகணேசன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## அடுத்த ஜனாதிபதி நானே; அநுரபண்டார கூறினாராம்

### விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் சகோதரருமான அநுர பண்டாரநாயக்க தானே கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005 அல்லது 2006 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த நிலையில், அதற்கு முன்னதாக பண்டாரநாயக்க இதனை அறிவித்திருந்ததாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பிய கேபிள தகவலில் தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பான பிரச்சினையை அடிப்படையாக கொண்டே அன்று அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறவுள்ளது என்பதை தீர்மானிக்கக் கூடியதாக இருந்தது.

இந் நிலையில் கொழும்பில் வெளியாகும் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்திருந்த அனுர பண்டாரநாயக்க, பண்டாரநாயக்க குடும்பத்தில் இறுதியாக அரசியலில் இருப்பவர் தான் என்பதால், தன்னுடைய வம் சத்தின் ஆட்சி தன்னுடன் முடிவடையும் என கூறியிருந்தார்.

அத்துடன் அவர் தன்னை நேர்மையான அரசியல்வாதி எனவும் அதில் கூறியிருந்ததாக அமெரிக்க தூதரகம் வோஷிங்டனுக்கு அறிவித்திருந்தது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜெப்ரி ஜே. லன்ஸ்டீட் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி இந்த இரகசிய கேபிள் தகவலை அனுப்பியிருந்தார்.(அ-2)

## திருமறைக்கலாமன்றத்தினரின் ஏற்பாட்டில் கலைப்பாலம் நிகழ்வுகள்

### வன்னியில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அனுசரணையுடன் திருமறைக் கலாமன்றம் ஏற்பாடு செய்துள்ள தமிழ்-சிங்களக் கலைஞர்கள் பங்குகொள்ளும் **கலைப் பாலம் -2014** நிகழ்வுகள் வன்னியில் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெறவுள்ளன.

வன்னியில் உள்ள பல அமைப்புக்களுடனும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள **கலைப்பாலம்-2014** நிகழ்வுகளின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் இன்று மாலை 6 மணிக்கு முழங்காவில், இரணை மாதா நகர் ஜோசவ்வாஸ் இளையோர் ஒன்றியத்துடன் இணைந்து இரணைமாதா நகர் செபமாலை மாதா ஆலய முன்றலில், நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக கலாசாரப் பேரவையுடன் இணைந்து கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 21 ஆம் திகதி மாலை 5 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கற்சிலைமடு இளையோர் கழகத்துடன் இணைந்து கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் 22 ஆம் திகதி மாலை 5 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சம்மேளனத்துடன் இணைந்து முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியிலும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய இளையோர் ஒன்றியத்துடன் இணைந்து புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய முன்றலிலும் கலைப் பாலம்- 2014 நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தமிழ்-சிங்களக் கலைஞர்களுக்கிடையில் கலைமூலமான உறவை மேம்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலைப் பாலம்-2014 நிகழ்வில் பரத நடனங்கள், கண்டிய நடனங்கள், புத்தாக்க நடனங்கள், நாடகம் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு புதிய தலைவலி...!



**ஐ.நா.** மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வர அமெரிக்கா தயாராகி வரும் நிலையில், அமெரிக்க செனெட் சபையில் பொறுப்புக் கூறுவதற்கான சர்வதேசப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வலியுறுத்தி, மற்றுமொரு தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

குடியரசுக் கட்சியின் வட கரோலினா செனெட்டர் றிச்சர்ட் புர், ஜனநாயக கட்சியின் றொபேட் கசேயுடன் இணைந்து இந்த தீர்மான வரைவை சமர்ப்பித்துள்ளார். இதற்கு மேலும் நான்கு செனெட்டர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கு தேவையான, உள்நாட்டு மீள்கட்டமைப்பு, மீள் குடியமர்வு, நல்லிணக்கத்திற்கான ஆதரவை வெளிப்படுத்துதல் என்ற தலைப்பில் இந்த தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போரின் போதும், அதற்குப் பின்னரும் இரு தரப்பினராலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்தும் வெளியான அறிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கு, சுதந்திரமான பொறுப்புக் கூறும் பொறிமுறை ஒன்றை அமெரிக்காவும், சர்வதேச சமூகமும் இணைந்து உருவாக்க வேண்டும் என்று இந்த தீர்மான வரைவில் கோரப்பட்டுள்ளது.

இந்த தீர்மான வரைவு, தற்போது செனெட் வெளிவிவகாரக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு ஒன்றுடன் தொடர்புடைய, தீர்மான வரைவு என்பதால் முதலில் அது வெளிவிவகாரக் குழுவினால் பரிசீலிக்கப்படுவது வழக்கம். அந்த தீர்மான வரைவு குறிப்பிட்ட நாட்டுடனான உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று வெளிவிவகாரக் குழு கருதினால் அதனை, செனெட்டில் சமர்ப்பித்து விவாதிக்க பரிந்துரை செய்யும்.

இப்போது இந்த நடைமுறைக்கே இந்த தீர்மான வரைவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மான வரைவை சமர்ப்பித்திருப்பவர், வோசிங்டனில் ஆட்சியில் இருக்கும், ஒபாமாவின் ஜனநாயக கட்சியை சேர்ந்த செனெட்டர் அல்ல. எதிர்க்கட்சியான, குடியரசுக் கட்சியின் செனெட்டரே, இந்த தீர்மான வரைவை முன்வைத்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்க அதிபர் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த செனெட்டர் றொபேட் கசேயும் இதற்கு இணை அனுசரணை வழங்கியுள்ளார்.

ஆக, இந்த தீர்மான வரைவு அமெரிக்க செனெட்டில் விவாதத்துக்கு வந்தாலோ, வாக்கெடுப்புக்கு விடப்பட்டாலோ, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என இரண்டு பக்கங்களிலும் பலமான ஆதரவு இருக்கும் என்று கருதப்படுகிறது.

இந்த தீர்மான வரைவு எப்போது செனெட் வெளிவிவகாரக் குழுவின் முன்பாக விவாதிக்கப்படும் என்று இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

பெரும்பாலும் இந்தத் தீர்மான வரைவை, செனெட் விவாதத்துக்கு அனுப்பும் முடிவையே வெளிவிவகாரக் குழு எடுக்கும் என்று கருதப்படுகிறது.

ஏனென்றால், ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரும் முன்னாயத்தங்களில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஏற்கனவே ஈடுபட்டுள்ளது.

இத்தகைய கட்டத்தில், ஜெனீவாவில் அமெரிக்காவின் நகர்வுகளுக்கு இந்த தீர்மானம் வலுச் சேர்ப்பதாக அமையும் என்று செனெட் வெளிவிவகாரக் குழுவினால் கருதப்படும் சூழல் உள்ளது.

எனவே, செனெட்டில் இந்த தீர்மான வரைவு குறித்து விவாதம் நடத்தப்பட்டாலோ, வாக்கெடுப்புக்கு விடப்பட்டாலோ, பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படும் என்று தகவல்கள் கூறுகின்றன.

சர்வதேச பொறுப்புக் கூறும் பொறிமுறை ஒன்றை உருவாக்க வலியுறுத்தும் இந்தத் தீர்மானம், அமெரிக்க செனெட்டில், நிறைவேற்றப்படுமானால், அது ஒபாமா அரசுக்கும் நெருக்கடியாக அமையும்.

ஏனென்றால், இலங்கை மீது பொறுப்புக் கூறல், நல்லிணக்கத்தை முன்னிறுத்தி, நெருக்கடி கொடுத்து வந்த அமெரிக்கா இதுவரையில், உள்ளகப் பொறிமுறையை மட்டுமே உருவாக்க அழுத்தம் கொடுத்து வந்துள்ளது. அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு இன்று வரை மாறவில்லை.

அதாவது போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகமான-சுதந்திரமான உள்ளக விசாரணைப் பொறிமுறை நடத்த அமெரிக்கா கோரி வந்துள்ள போதிலும், அரசாங்கம் அதை நிறைவேற்றவில்லை.

ஆனாலும், அடுத்த கட்டம் குறித்து அமெரிக்கா சிந்திக்க வேண்டிய நிலை உள்ள போதிலும், சர்வதேச விசாரணைப் பொறிமுறை குறித்தோ, இலங்கை மீதான தடைகளை விதிப்பது குறித்தோ, அமெரிக்கா இன்னமும் ஆராயவில்லை என்று அண்மையில் கொழும்பு வந்த உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்திருந்தார்.

இம்முறை, ஜெனீவாவில் அமெரிக்கா எத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வரவுள்ளது என்றோ, அதில், சர்வதேச விசாரணைக் கோரிக்கை இடம்பெறுமா என்றோ, இன்னமும் வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை.

இத்தகைய கட்டத்தில், செனெட் சபையில், சுதந்திரமான சர்வதேச பொறுப்புக் கூறும் பொறிமுறையை ஏற்படுத்த வலியுறுத்தும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுமானால், அது ஜெனீவா தீர்மானத்தில், சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுக்கும்.

இலங்கையுடன் அதிகம் முரண்படாத போக்கைக் கடைப்பிடிக்க ஒபாமா நிர்வாகம் இம்முறையும் முடிவு செய்திருந்தாலும் இந்த தீர்மானம் அதற்கு கடும் அழுத்தங்களைக் கொடுப்பதாக இருக்கும்.

ஏனென்றால் சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறை ஒன்றை உருவாக்க வலியுறுத்தும் தீர்மானத்தை செனெட் நிறைவேற்றிய பின்னர், ஒபாமா நிர்வாகத்தினால் அதிலிருந்து பின்வாங்குவது சிக்கலானது.

அதேவேளை, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தி வந்த அமெரிக்கா, இம்முறை ஜெனீவாவில், சர்வதேச விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்த திட்ட மிட்டிருக்குமேயானால், அதற்கு செனெட்டின் தீர்மானம் இன்னும் வலுச் சேர்ப்பதாக அமையும்.

எது எவ்வாறாயினும் இந்த தீர்மான வரைவு, அமெரிக்க நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு ஒரு சாதகமற்ற சமிக்ஞையையே வெளிப்படுத்தியுள்ளது.

ஏனென்றால், இலங்கைக்கு சாதகமான கருத்தை வோசிங்டனில் உருவாக்கும் நோக்கில் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மேற்கொண்ட பயணம் தோல்வியில் முடிந்துள்ளதை இது மீண்டும் நிரூபித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலர் நிஷா 'தேசாய் பிஸ்வாலை, லலித் வீரதுங்க சந்தித்து, அரசாங்கத்தினது நிலைப்பாட்டையும் இலங்கையின் உள்நாட்டு நிலவரங்களையும் எடுத்துக் கூறிய அடுத்தடுத்த நாட்களிலேயே அவர் கொழும்புக்கு புறப்பட்டார்.

இது லலித் வீரதுங்கவின் கருத்துக்களை நிஷா தேசாய் பிஸ்வால் எந்தளவுக்கு செவிமடுத்தார், அவர் கூறியவற்றை எவ்வளவு நம்பினார் என்ற கேள்வியை எழுப்பியிருந்தது.

வோசிங்டனில் பல நாட்கள் தங்கியிருந்து பிரசாரங்களை மேற்கொண்ட போதிலும், நிஷா தேசாய் பிஸ்வால் தவிர்ந்த இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த வேறெந்த அதிகாரிகளும் அவரை சந்திக்கவில்லை.'

ஆனால், லலித் வீரதுங்க, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அரசாங்கத்தின் நிலையை தெளிவுபடுத்துவதில் கூடிய அக்கறை காட்டியிருந்தார். அதற்காக, பொதுசனத் தொடர்பு நிறுவனம் ஒன்றின் ஆதரவுடன் பெருமளவு பணம் செலவிடப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால், அத்தகைய பிரசாரங்களை பிசுபிசுக்க வைக்கும் வகையில் இந்த தீர்மான வரைவு செனெட்டின் வாசற்படியை எட்டிப் பார்த்துள்ளது.

இதிலிருந்து அமெரிக்காவின் முடிவில் மாற்றங்களை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் நகர்வுகள் இதுவரை தோல்வி கண்டுள்ளதையே உணர முடிகிறது.

அதேவேளை இந்த தீர்மான வரைவு செனெட்டில் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் சூழல் ஒன்று உருவானால், அது இலங்கை அரசாங்கத்தின் தலைவலிகளை அதிகரிக்கச் செய் யும்.


ஏனென்றால், செனெட் ஊடாக கொடுக்கப்படும் அழுத்தங்களை ஒபாமா நிர்வாகம் தானே சுமந்து கொண்டிருக்காது, அதனை இலங்கை மீதே சுமத்த முற்படும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

# 13.02.2014-14.03.2014



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**வலியச் சென்று உதவி வாய்ப்புக்களை வரவழைத்துக்கொள்ளும் மிதுன இராசி நேயர்களே**

**வெளிவட்டாரப்பழக்க வழக்கம் விரிவடையும்!**

## உங்களுக்கு தாய்வழி ஆதரவு கிடைக்கும்

## வெளிவட்டாரப் பழக்கவழக்கம் விரிவடையும்

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, மாதத் தொடக்கத்திலே உங்கள் ராசிநாதன் புதன் வக்ர நிவர்த்தியாகின்றார். எனவே வைத்திய செலவுகள் குறையும். வம்பு, வழக்குகளும் ஓயும். உற்சாகத்துடன் பணியாற்றி, ஊர் மக்களின் மனதில் இடம்பிடிப்பீர்கள். தாய் வழி ஆதரவு கிடைக்கும். தக்கவிதத்தில் வீடுகட்டி குடியேற வேண்டும் என்ற ஆசை உருவாகும். வெளிவட்டார பழக்கவழக்கம் விரிவடையும்.

இம்மாதத்தில் இரண்டு கிரகங்கள் வக்ர நிவர்த்தியாகின்றன. இரண்டு கிரகங்கள் வக்ர இயக்கத்தைத் தொடங்குகின்றன. புதன மற்றும் வியாழன் வக்ர இயக்கத்திலிருந்து விடுபடுகிறார்கள். சனி மற்றும் செவ்வாய் வக்ர இயக்கத்தை தொடங்குகிறார்கள். பாதகாதிபதியாக விளங்கும் கிரகங்கள் வக்ரம் பெறும்பொழுது அது யோகத்தைக் கொடுக்கும். சாதகாதிபதியாக விளங்கும் கிரகங்கள் வக்ரம் பெறும் பொழுது அது தோஷத்தைக் கொடுக்கும். எனவே இது போன்ற காலங்களில் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

மாதத் தொடக்கத்தில் தனாதிபதி சந்திரன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார். சகாய ஸ்தானாதிபதி சூரியன் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். கடுமையாக முயற்சித்தும் இது வரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

கேதுவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் ஆரோக்கிய பாதிப்புகள் அடிக்கடி உருவாகலாம். சர்ப்ப கிரகங்கள் உங்களுக்கு சந்தோஷத்தை வழங்க சர்ப்ப சாந்தியை முறையாக செய்வது நல்லது. சனி உச்சம் பெற்றிருப்பது ஒருவழிக்கு யோகம் தான். குழந்தைகளின் எதிர்காலம் கருதி எடுத்த முயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.

**புதனின் பெயர்ச்சியும், வக்ர நிவர்த்தியும்!**

ராசிநாதனாகவும், 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன் மாதத் தொடக்கத்திலேயே வக்ர நிவர்த்தியாகின்றார். இது நன்மை தான். உடல் நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கடமையில் கண்ணும், கருத்துமாக விளங்கும் உங்களுக்கு கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரும். காரிய வெற்றிக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர். மார்ச் 10ஆம் திகதி கும்பத்தில் புதன் சஞ்சரிக்கும் போது பயணங்களால் பலன் கிடைக்கும். தொலைதூரத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 25ஆம் திகதி மகர ராசிக்குள் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக நல்ல மாற்றங்களும் உங்களுக்கு வந்து சேரும். 12-க்கு அதிபதி சுக்ரன் 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது எண்ணற்ற மாற்றங்கள் வந்து சேரும். பணப்புழக்கம் வந்து சேரும். ஆடை ஆபரண சேர்க்கை உண்டு. தொலைபேசி வழித்தகவல் மகிழ்சசியைக் கொடுக்கும். கொடிகட்டிப் பிறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும்.

**சனியின் வக்ரமும், செவ்வாயின் வக்ரமும்!**

ஒரே நாளில் சனி, செவ்வாய் ஆகிய இரண்டு கிரகங்களும் வக்ர இயக்கத்தைத் தொடங்குகின்றன. அந்த நிகழ்வு மார்ச் 1ஆம் தேதி நிகழவிருக்கிறது. 6ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாயும், 8ஆம் இடத்திற்கு அதிபதியான சனியும் வக்ர கதியில் இயங்கும் பொழுது நன்மைகளையே செய்யும். அதே நேரத்தில் அந்த இரண்டு கிரகங்களுக்கும் வேறு இரண்டு ஆதிபத்தியங்கள் இருப்பதால், பணப்பற்றாக்குறை ஏற்படலாம். பக்கபலமாக இருப்பவர்கள் விலகிச் செல்லலாம். பாகப்பிரிவினைகளில் தடைகள் ஏற்படலாம். தேக நலனில் கூட திடீர் திடீரென பாதிப்புகள் ஏற்படலாம்.

**மிதுன குருவின் வக்ர நிவர்த்தி காலம்!**


உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் குரு இது வரை வக்ர இயக்கத்தில் இருந்தார். கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் வக்ர நிலையில் இருக்கும் பொழுது யோகத்தைச் செய்யும். ஆனால் மாதக்கடைசியில் மார்ச் 12ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகின்றார். குடும்பசுமை கூடும். உடன் இருப்பவர்களால் பிரச்சினைகள் அதிகரிக்கும். தொழிலில் மாற்றுச் சிந்தனைகள் மேலோங்கும். தொலைதூரத்திலிருந்து மனக்கசப்பு தரும் தகவல் வந்திடலாம்.

இம்மாதம் தென்முகக் கடவுள் வழிபாட்டை தேர்ந்தெடுத்து வழிபட்டு வந்தால் நன்மைகளை நாளும் சந்திக்கலாம்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றே சொல்லலாம். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வாங்கல் கொடுக்கல்களில் கொஞ்சம் கவனம் தேவை. வாழ்க்கைத்துணை வழியே சச்சரவும், சமாதானமும் மாறிமாறி வந்துகொண்டே இருக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீடு மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய தொழில் தொடங்கலாமா? என்று சிந்திப்பர். குருவின் வக்ர நிவர்த்திக்குப் பிறகு தாய்வழி ஆதரவு கூடும். தக்கவிதத்தில் பலன்கள் கிடைக்க அங்காரக வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

## சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற கடக இராசிநேயர்களே! சேமிப்பு உயரும் நேரம்!**

## எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும்

## கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சந்திரன் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கின்றார். வெற்றிகள் ஸ்தானாதிபதி புதனும், உங்கள் ராசியை பார்க்கின்றார். 6-க்கு அதிபதி குரு வக்ரம் பெற்று விளங்குகிறார். எனவே எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி பெறுவீர்கள். இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும்.

கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குருவின் பார்வை பலத்தால் உடல்நலம் சீராகும். உதிரி வருமானங்கள் பெருகும். படபடப்பை குறைத்துக்கொண்டு பக்குவமாக செயற்படப் போகிறீர்கள். கடன் சுமை இருந்தாலும், கவலைப்பட மாட்டீர்கள். காலங் காலமாக நடைபெறவில்லையே என்று எதிர்பார்த்துக் காத்திருந்த ஒரு சில காரியங்கள் இம்மாதம் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கப் போகிறது.

அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம் இருப்பதால் உடல் நலத்தில் அப்போதைக்கப் போது சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். வி.ஐ.பிக்களின் அறிமுகத்தால் விருமபிய காரியங்களை எல்லாம், விரும்பியபடியே செய்து முடிப்பீர்கள். வீடு வாங்கும் முயற்சி, அல்லது கட்டும் முயற்சியில் இருந்த தடைகள் அகலும். பத்திரப்பதிவில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

இம்மாதம் இரண்டு கிரகங்கள் வக்ர நிவர்த்தியாகின்றன. ஒன்று புதன், மற்றொன்று குரு. அதே நேரத்தில் வேறு இரண்டு கிரகங்களான சனி மற்றும் செவ்வாய் வக்ரமடைய ஆரம்பிக்கின்றன. புதனின் வக்ரம மற்றும் குருவின் வக்ரம் உங்களுக்கு நன்மையை வழங்கும். சனி, செவ்வாயின் வக்ர காலத்தில் குடும்பப் பிரச்சினைகள் உருவாகலாம். குழப்பங்கள் அகல குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடும் கைகொடுக்கும்.

**பொன்னான புதனின்பெயர்ச்சியும், வக்ர நிவர்த்தியும்!**

3, 12-க்கு அதிபதியான புதன் மாதத் தொடக்கத்திலேயே வக்ர நிவர்த்தியாகின்றார். எனவே பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். பம்பரமாக சுழன்று பணிபுரியப் போகின்றீர்கள். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். மார்ச் 10 ஆம் திகதிக்கு கும்ப ராசிக்கு புதன் செல்லவிருக்கிறார். 12-க்கு அதிபதியான புதன் 8 இல் சஞ்சரிக்கும் போது விபரீத ராஜ யோகம் செயற்படும் என்பதால் திட்டமிடாது செய்யும் காரியங்களில்கூட வெற்றி காண்பீர்கள்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 4, 11-க்கு அதிபதியான சுக்ரன் பெப்ரவரி [illegible] இடத்தில் சஞ்சரித்து இயல்பான வாழ்க்கையினில் சில மாற்றங்களை வழங்கப்போகிறார். இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றங்களை மட்டுமின்றி கடல் தாண்டும் முயற்சிகளிலும் கவனம் செலுத்தப் போகிறீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் அப்போதைக்கு அப்போது தலைதூக்குவதன் மூலம் அமைதி கொஞ்சம் குறையலாம். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து செல்வது மன அமைதிக்கு வித்திடும்.

**சனியின் வக்ரமும், செவ்வாயின் வக்ரமும்!**

ஒரே நாளில் சனியும், செவ்வாயும் தனது வக்ர இயக்கத்தைத் தொடங்குகின்றன. இந்த நிகழ்வு மார்ச் முதலாம் திகதி நடைபெறவிருக்கிறது. செவ்வாயின் வக்ரம் அவ்வளவு நல்லதல்ல. 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் வக்ரம் பெறும்பொழுது பிள்ளைகளை பின்னணியாக இருந்து கண்காணித்துக் கொள்வது நல்லது. அவர்களது போக்கில் மாற்றங்கள் ஏற்படும்பொழுது சுதாரித்துக் கொள்வது தான் உங்களுக்கு உகந்தது. விரயங்கள் அதிகரிக்கலாம், தொழிலிலும் கூட்டாளிகளை நம்பி செயறபட்ட சில காரியங்கள் தாமதப்படலாம். சனியின் வக்ர காலத்தில் வாழ்க்கைத்துணையின் வழியே விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. வீட்டு பராமரிப்பு செலவும் அதிகரிக்கும்.

**மிதுன குருவின் வக்ர நிவர்த்தி காலம்!**

உங்கள் ராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வக்ர நிவர்த்தியாகும் நாள் மார்ச் [illegible] திகதியாகும். 9- க்கு அதிபதி [illegible] நிவர்த்தியாகும் பொழுது பொன், பொருள்கள் சேரும். புகழ் கூடும். தந்தை வழியில இருந்த தகராறுகள் அகலும். முன்னேற்றப்பாதையில்இருந்தமுட்டுக்கட்டைகள அகலும். இணைந்து செயற்பட மறுத்தவர்கள்கூட தானாக வந்து இணைந்து செயற்படுவர். இம்மாதம் உமாமகேஸ்வரரை வழிபட்டு, உன்னதமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பணப்புழக்கம் அதிகரிக்கும் மாதமாகவே கருதலாம். தாய் வழி ஆதரவு கிடைக்கும். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் அகலும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். சேமிப்புக்களை எடுத்து விலை உயர்ந்த பொருட்களை வாங்க முன்வருவீர்கள். தூரதேசத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். புதிய வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு மாதத்தின் மையப்பகுதியில் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். சர்ப்ப சாந்தியை செய்து கொள்வதன்மூலம் சந்தோஷங்களை வரவழைத்துக்கொள்ளலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் நல்லிணக்க முனைப்புக்களை எடுத்தாலும் குற்றங்கள் சுமத்தப்படுகின்றன

## குமுறுகிறார் அமைச்சர் கெஹலிய

**நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பல் வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ள போதும் வேறு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் எமக்கெதிராக தொடர்ந்தும் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு வருவதோடு குற்றச்சாட்டுகளும் அடுக்கப்படுகின்றன. நல்லிணக்கம் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் ஏற்கக் கூடியதாக உள்ளபோதும் ஏனைய கருத்துக்கள் வேறு நிகழ்ச்சி நிரலினடிப்படையில் தெரிவித்ததாகவே சந்தேகம் எழுவதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

நல்லிணக்க ஆணைக்குழுவின் 75 சதவீதமான பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர், சர்வதேச மட்டத்தில் இலங்கை தனிமைப்படுத்தப்படவில்லை எனவும், இலங்கைக்கு ஆதரவாக பல நாடுகள் உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஜெனீவா மாநாடு குறித்து பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது நாட்டினதும் மக்களினதும் தேவையாகும். நாம் முழுமையான தெரிவுடனே இதனை முன்னெடுத்து வருகிறோம்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நல்லிணக்கத்துடன் தொடர்புபட்ட பல்வேறு பொருளாதார அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அங்கு செல்பவர்களுக்கு அதனை நேரில் காண முடியும்.

உலகில் எந்தவொரு நாடும் மேற்கொண்டிராத அளவு குறுகிய காலத்தினுள் நல்லிணக்கத்துடன் தொடர்புள்ள பல விடயங்கள் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நல்லிணக்கம் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்ட விடயத்தை நாமும் ஏற்கிறோம். யுத்தத்திற்கு 30 வருடம் பிடித்தது என்பதற்காக நல்லிணக்கத்திற்கும் 30 வருடங்கள் எடுக்க முடியாது என அவர் கூறியிருப்பது சரியே.

ஆனால் அவர் குறிப்பிட்டுள்ள ஏனைய விடயங்கள் வேறு நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாகவே இருக்கும் என்று கருதத்தோன்றுகிறது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை நாளாந்தம் முன்னெடுக்கப்படுகிறது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சிறு மற்றும் மத்திய தர பரிந்துரைகள் அடங்கலான 75 வீத பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சிய பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு அரசியலமைப்பில் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது.

இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கும் பிரேரணைகளுக்கும் தெளிவான காரணம் என்ன என்பது புதிதாகவுள்ளது. ஏதும் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இவ்வாறு இலங்கைக்கு எதிராக பிரேரணை வைக்கப்படுவதாக சந்தேகம் எழுகிறது.

எமது தரப்பில் நாம் எதனையும் மறைக்கவில்லை. வெளிப்படைத்தன்மையுடன் சகல விடயங்களையும் முன்வைத்துள்ளோம். எதிர்காலத்திலும் வெளிப்படையாக தகவல் பரிமாற தயாராகவுள்ளோம்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்தும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முன்னெடுக்கப்படுவது பற்றியும் தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தை தெளிவுபடுத்தி வருகிறோம். இங்குள்ள உண்மை நிலைமையின் அடிப்படையில் சாதகமாக பேசக்கூடிய சூழல் காணப்பட்டாலும் தொடர்ந்தும் எதிரான நடவடிக்கைகளை சில தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர். எமக்கு மறைப்பதற்கு எதுவும் கிடையாது.

நம்பகரமான விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. நல்லிணக்க ஆணைக்குழு அவ்வாறான விசாரணையை முன்னெடுத்தே பரிந்துரைகளை முன்வைத்தது.

சில பலம்வாய்ந்த நாடுகள் எமக்கு எதிராக இவ்வாறு பிரேரணை கொண்டு வந்தாலும் நாம் தனிமைப்படுத்தப்படவில்லை. சீனா போன்று பல நாடுகள் எமக்கு ஆதரவாக உள்ளன.

தற்பொழுது கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ள பிரேரணையும் முன்னர் கொண்டுவரப்பட்ட பிரேரணையை ஒத்ததாக இருக்கும். வேறு நிழ்ச்சி நிரல்படியே இலங்கைக்கு எதிராக பிரேரணை முன்வைக்கப்படுகிறது. நாம் நல்லிணக்கத்துக்காக என்ன முன்னெடுப்புகளை செய்தாலும் எதிர் மறையாகவே பேசப்படுகிறது. குற்றஞ்சுமத்தப்படுகிறது.

அவுஸ்திரேலிய பிரதமர் வடகிழக்கு பகுதிகளுக்கு சென்று நிலைமைகளை அவதானித்த பின் அதனை பாராட்டினார். இன்று அவுஸ்திரேலியா வேறு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. எமக்கு எதிராக சில தரப்பினர் பிரசாரங்களை முடக்கியுள்ளனர். நாம் உண்மை நிலைமைகளை எடுத்துக்கூறி வருகிறோம்.

எமக்கு எதிராக பிரேரணை கொண்டுவரும் நாடுகளுடன் பேசி வருகிறோம். எமக்கு எதிராக ஜெனீவா செல்ல உள்ள இலங்கை தரப்புகளுடனும் பேச அழைப்பு விடுத்துள்ளோம். (அ-2)



சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி அங்கணாக்கடவை மீனாட்சி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது, மூலஸ்தானத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவதையும் கலசம் வைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## அமெரிக்காவின் பிரேரணை அரசாங்கத்துக்கெதிரானதல்ல

### பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

ஜெனீவாவில் அமெரிக்காவினால் கொண்டு வரப்படுகின்ற பிரேரணையானது இலங்கையில் இறுதிப்பகுதியில் ஏற்பட்டதாகக் கூறப்படும் சம்பங்களை பற்றியது என கோதபாய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

அமெரிக்காவுக்கு சாதகமான அரசாங்கம் ஒன்றை இலங்கையில் ஸ்தாபிக்க முயற்சிகள் இடம் பெறுகின்றன.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவிருக்கின்ற பிரேரணை நாட்டுக்கு எதிரானது அல்லது அரசாங்கத்திற்கு எதிரானது என்று பலர் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அவர்கள் கூறுவதில் அர்த்தம் எதுவும் இல்லையெனில், இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட படையினர், அதிகாரிகள் நாட்டுக்கு உரியவர்கள் அன்றி, அரசாங்கத்திற்கு உரியவர்கள் அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்நிலையில், ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்றி, இந்து சமுத்திர நாடுகளில் தமது முகாம்களை அமைத்து அதன் மூலம் தமது சுயாதிபத்தியத்தை ஏற்படுத்த முனைகின்றவர்கள் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கையை மேற்கொள்ள முனைகின்றனர்.

இதனை இலங்கையர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (அ-2)

## பிரதேச செயலகங்களில் சிறுவர் பாதுகாப்பு பிரிவு

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பு- அபிவிருத்தி ஆகியவற்றை உறுதிப்படுததும் பிரதேச செயலகங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் இந்தப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதறகமைய வடமாகாணத்தின் 23 பிரதேச செயலகங்களில் "சிறுவர மற்றும் மகளிர் அபிவிருத்திப் பிரிவு" ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்புதிய பிரிவுகளுக்கு சுமார் 80 இலட்சம் ரூபா செலவில் கணனி மற்றும் காகிதாதிகள் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவினால் அண்மையில் பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பாலர் பாடசாலைகளுக்கு சிறுவர் அபி.அமைச்சு நிதி

தேசத்துக்கு மகுடம் கண்காட்சி-2014 மற்றும் அபிருத்தி திட்டத்தை முன்னிட்டு குருநாகலை- புத்தளம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் அமைந்துள்ள வசதி குறைந்த பாலர் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு 73 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

குறித்த அமைச்சின் கீழ் இயங்கும் சிறுவர் செயலக அலுவலகங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் குறித்த 3 மாவட்டங்களிலுள்ள 200 பாலர் பாடசாலைகளின் விளையாட்டுத் திடல்களுக்கான விளையாட்டு உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதற்காக 60 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 100 பாலர் பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதற்காக 10 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதென சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் தெரிவித்தார்.

இதுதவிர குறித்த மாவட்டங்களில் அமைந்துள்ள பாலர் பாடசாலைகளில சுத்தமான குடிநீர் வசதியற்ற 50 பாடசாலைகளை தெரிவு செய்து தண்ணீர் சுத்தமாக்கிகளை வழங்குவதற்காக மேலும் 30ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் அமைச்சினால் விசேடமாக அமைக்கப்பட்ட பகுதியில் பிள்ளைகள் விளையாடி மகிழ்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அமைச்சின் செயற்பாடுகளை விளக்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என அமைச்சர் தெரிவித்தார்.(அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நவிப்பிள்ளையின் அறிக்கையில் முஸ்லிம் காங்கிரசுக்கும் பங்கு

## அமைச்சர் வீரவன்ச தெரிவிப்பு

ஐ.நா.மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தயாரித்துள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தகவல்கள் வழங்கியவர்களில் அமைச்சு பதவியின் சிறப்புரிமைகளை அனுபவித்து வரும். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இருப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சீதுவ லியனகஹாமுல்ல பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், ஜெனீவா மனிதவுரிமை ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான யோசனை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 28 ஆம் திகதி நடத்தப்படுவதால், அரசாங்கம் மேல் மற்றும் தென்மாகாண சபைகளின் தேர்தலை 29 ஆம் திகதி நடத்துவதாக சர்வதேசத்திற்கு துதிபாடும் எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன.

ஜெனீவா வாக்கெடுப்பை காட்டி தேர்தலில் வெல்ல அரசாங்கம் முயற்சிப்பதாக இவர்கள் கூறுகின்றனர். அவர்கள் கூறுவது பொய்யான கதை. மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெற்றது. அப்போது எந்த ஜெனீவா வாக்கெடுப்பு நடந்தது?

அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றது. ஜெனீவாவில் வாக்கெடுப்பு நடந்தாலும் நடக்காது போனாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெறும் வெற்றியை நிறுத்த எந்த ஜாம்பவானும் நாட்டில் இல்லை.

எனினும் இம்முறை ஜெனீவா வாக்கெடுப்பும்,மேல், தென் மாகாணங்களின் தேர்தலும் அடுத்தடுத்து வருவதால், தேசத்தின் மன உறுதியையும், நாட்டின் ஐக்கியத்தை எதிரான சக்திகளுக்கு காண்பிக்கும் சிறப்புமிக்க சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைத்துள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# பயங்கரவாதத்தை தோற்கடித்ததால் சர்வதேசம் அழுத்தம் கொடுக்கிறது

## இப்படிக் கூறுகிறது பிக்கு முன்னணி

மனித உரிமைகளின் பின்னணியில் இருக்கும் பொய் மற்றும் அரசியலை நன்கு புரிந்து கொண்டு அதனை எதிர்கொள்வதற்காக தேசம் என்ற வகையில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தேசப்பற்றுள்ள பிக்கு முன்னணியின் தலைவர் போங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். நாட்டின் தேசியத்தை அழிக்க உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் சில நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இது கவலைக்குரிய விடயம். இலங்கைக்கு எதிராக மனித உரிமை தொடர்பில் விசாரணை நடத்த எவருக்கும் முடியாது.


கொடூரமான பயங்கரவாதத்தை தோற்கடித்ததன் காரணமாக இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகளிடம் இருந்து இந்தளவுக்கான அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. இலங்கை பயங்கரவாதத்தை தோற்கடிக்காது இருந்திருந்தால். இப்படியான அச்சுறுத்தல்களும் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படமாட்டாது.

இந் நிலைமையை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.மனித உரிமை என்ற விடயத்திற்கு பின்னால் இருக்கும் பொய் மற்றும் சூழ்ச்சியை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

தேசியத்தின் அடிப்படையில் நாம் இந்த சதித்திட்டத்தை எதிர் நோக்க வேண்டும். எதிர்காலத்தில் நாம் உலகம் உணரும்படியான ஒன்றை செய்ய எதிர்பார்த்துள்ளோம். அதற்கான வலுவும் சக்தியும் உள்ளது என்றார். (அ-2)

# மரண அறிவித்தல்

**அமரர் குலசிங்கம் சந்திரபுஸ்பம் (சின்னத்தம்பி)**



துன்னாலைமத்தியைபிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி (சாரதி) என்று அன்பாக அழைக்கப்படும் குலசிங்கம் சந்திரபுஸ்பம் அவர்கள் 10.02.2014 (திங்கள்) அன்று காலமாகி விட்டார்.

இவர் காலம் சென்ற குலசிங்கம் சந்தானலட்சுமி ஆகியோரின் பாசமிகு மகனும் ஜெயராசா (ஜெயம்), ஜோகதாஸ் (சுவிஸ்), காலம் சென்ற புஸ்பராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, சுகிர்தா ஆகியோரின் மைத்துனரும், சங்கீதா, அனுஷியா, துவா ரகன், லாவன்ஜா, செந்தூரன், சங்கீத், விதுஷன், விபுலன், விபர்ணா ஆகியோரின் பாசமிகு சிறிய தகப்பனாரும், வாகீசனின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 11.02.2014 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வேருண்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**துன்னாலை மத்தி, கரவெட்டி.** இ **குடும்பத்தினர்**

# பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி ஆசீர்வாதம் லூர்தம்மா**

இளவாலை போயிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் லூர்தம்மா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 2மணிக்கு போயிட்டி லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் போயிட்டி லூர்து அன்னை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



**திருமதி சண்முகதாசன் வசனாவதியம்மா**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகதாசன் வசனாவதியம்மா 12 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை 9 மணிக்கு St.John's Norway Cemetery & Crematorium, 256 Kingston Rd,Toronto, ON M4L 1S7,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**சின்னத்தம்பி கனகரத்தினம்**

ஆவரங்கால்10 ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பி டமாகவும் கொண்ட சின்னத்தம்பி கனகரத்தினம் 12 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கருதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**சத்யசீலன் பொன்னுதுரை**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சத்யசீலன் பொன்னுதுரை 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை முற்பகல் 11 மணிக்கு Highland Funeral Home & Cremation Centre-Scarborough Chapel, Shappard Avenue East ,Scarborough, ON, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**நாகலிங்கம் சிவபாதசுந்தரம்**

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா Rugbyஐ வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவபாதசுந்தரம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை 5.30மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**இராசா தெய்வேந்திரம்**

நல்லூரைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Nyborgஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசா தெய்வேந்திரம் 12 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 7 மணிக்கு Nyborg Kapel என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**திருமதி வேலும்மயிலும் சரஸ்வதி**

வல்வெட்டித்துறை நெடியகாட்டைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலும்மயிலும் சரஸ்வதி 12 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கனத்தை இந்து பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**அல்பேட் இன்பநாயகம் சின்னையா**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மட்டக்களப்பு, பாண்டிருப்பை பிறப்பிடமாகவும் தற்போது கனடா Torontoஐ வசிப்பிடமாகவும் கொண்ட அல்பேட் இன்பநாயகம் சின்னையா 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று கனடாவில் நடைபெறும்.



**கந்தையா சொக்கலிங்கம்**

ஏழாலை தெற்கு விழுசிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சொக்கலிங்கம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை7 மணிக்கு Chapel Ridge Funeral Home ,8911 Woodbine Avenue, Markham ,ON L3R 5G1 ,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

# புலமைஆசான் நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

ஆசிரியர் ப.சசிறதனின் "புலமை ஆசான்" எனும் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டி நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளி நொச்சி மத்திய கல்லூரியின் (கிளிநொச்சி ம.ம.வி.) பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை யின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருநாவுக்கரசு சிவரூபன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப் பாளர் க.முருகவேல், சிறப்பு விருந்தினர் களாக கிளி/மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், கிளி/மாவட்ட வைத்திய சாலையின் வைத்திய கலாநிதி மா.ஜெயராசா, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் இணைப்பாளர் பா.தனபாலன், கௌரவ விருந்தினராக மகாதேவா சைவச் சிறுவர் இல்லத் தலைவர் தி.இராசநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை அம்பாள் ஹாட்வெயார் உரிமையாளர் மா.சிவராசா பெற்றுக் கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து நூலின் அறி முகவுரையை கிளி/கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் நிகழ்த்தவுள்ளார். (அ-9)

# புகையிரத சேவை தொடர்ந்தும் பாதிப்பு

புகையிரத ஓட்டுநர்கள் மேற்கொண்டு வரும் பணிப்பகிஷ்கரிப்பால் புகையிரத சேவை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

சில புகையிரத சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதோடு சில புகையிரதங்கள் மட்டுப்படுத்தப்பட்ட சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நேற்று போயா விடுமுறை தினம் என்பதால் தூர் இடங்களுக்குச் செல்லவென பயணிகள் கொழும்பு புகையிரத நிலையத்தில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

மேலும் பேருந்து நிலையங்களிலும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்டது. சில சமயம் புகையிரதம் தாமதமானதால் பயணிகள் அதிகாரிகளுடன் முரண்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளது. (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் கண்ணீர் விட்டு கதறிய உறவுகள்!

காணாமற்போன எமது உறவுகளை மீட்டுத்தருவீர்கள் என்று இறுதியாக நாம் நம்புவது இந்த ஆணைக்குழுவினைத்தான் என்று ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் காணாமற்போனவர்களின் உறவினர்கள் கண்ணீருடன் சாட்சியமளித்துள்ளனர்.



யுத்த காலத்தில் வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்றுக்காலை 9 மணியளவில் யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



யாழ்.மாவட்டத்தில் இந்த விசாரணைகள் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறவுள்ளன. கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம ஆண்டு வரையான யுத்த காலப்பகுதியில் வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகள் அந்த ஆணைக்குழுவின் தலைவர் மக்வேல் பராக்கிரம பரணஹம மற்றும் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான திருமதி சுரண்யா வித்யவத்தனே, திருமதி மனோ ராமநாதன் ஆகியோர் முன்னிலையில் முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக காணாமற் போனோர் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்று யாழ். மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பமானது.



இந்த விசாரணைக்கு வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் உள்ள இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு, கல்வியங்காடு, கோப்பாய் தெற்கு, கோபபாய் மத்தி, கோப்பாய் வடக்கு, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த விசாரணக்கு அழைக்கப்பட்டவர்களை விட அதிகளவானர்கள் வருகை தந்திருந்ததோடு காணாமற்போன தமது உறவினர்களை மீட்டுத்தருமாறு ஆணைக்குவினரிடம் மன்றாட்டமாக வேண்டுகோள் விடுத்தனர்.



அத்தோடு இந்த ஆணைக்குழுவிற்கு சாட்சியமளித்தவர்களில் அதிகளவானர்கள் காணாமற்போன தமது உறவிர்களை உயிருடன் மீட்டுத்தருவீர்கள் என்று இறுதியாக தாம் நம்பும் ஒரேயொரு அமைப்பாக இந்த ஆணைக்குழுவினையே நம்புவதாகவும் பல இடங்களிலும் பல போராட்டங்கள் ... உறவினர்களை மீட்க நடவடிக்கையெடுத்தும் அதிலெல்லாம் தாம் தோல்வியடைந்து விட்டதாகவும் ஆதங்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



இதேவேளை, இன்று 15 ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மறவன்புலோ, சாவகச்சேரி நகரம், சங்கத்தானை, சாவகச்சேரி வடக்கு, கல்வயல், நுணாவில் கிழக்கு, நுணாவில் மத்தி, நுணாவில் மேற்கு , மட்டுவில் நுணாவில், மட்டுவில் மத்தி, மட்டுவில் வடக்கு, மட்டுவில் மேற்கு, சந்திரபுரம ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்தவர்களுக்காக விசாரணை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிவரை இடம்பெறவுள்ளது.



அத்தோடு நாளை 16 ஆம் திகதி யாழ். பிரதேச செயலகத்தினைச் சேர்ந்த யாழ்.நகர் கிழக்கு, யாழ். நகர் மேற்கு, நாவாந்துறை வடக்கு, நாவாந்துறை தெற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவைசேர்ந்தவர்களுககான விசாரணை யாழ்.பிரதேச செயலகத்தில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரை இடம் பெறவுள்ளது.

நாளை மறுநாள் 17 ஆம் திகதி யாழ். பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கொழும்புத்துறை மேற்கு, கொழும்புத் துறை கிழக்கு, சுண்டுக்குளி தெற்கு, சுண்டுக்குளி வடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான விசாரணை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை இடம்பெறவுள்ளது என ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலர் முன்னரே அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**எஸ்.ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு என்ன நேரிடுகிறது என்பதல்ல, அதைக் கொண்டு அவன் என்ன செய்கின்றான் என்பதுதான். - யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# புலம்பெயர் உறவுகளின் வேரறுப்பைத் தடுக்க வேண்டும்

கொழும்பு கம்பன் கழகத்தின் விழா நேற்று முன்தினம் கொழும்பு இராமகிருஸ்ணமிஷன் மண்டபத்தில் ஆரம்பமாகியது.

இந் நிகழ்வில் மலேசிய நாட்டின் அமைச்சர் டத்தோ எம்.சரவணன் தொடக்க உரையாற்றினார்.

"...நற்றவத்தவர் உள்ளிருந்து ஓம்பும் நமசிவாய நாமத்தை நான் மறவேன்" என தனது தொடக்க உரையை ஆரம்பித்தார்.

மலேசிய நாட்டு அமைச்சர் நமசிவாய நாமத்தை நான் மறவேனே என்று தொடங்கிய போது மண்டபத்தில் இருந்தவர்கள் நெக்கித்துப் போனார்கள்.

தொடர்ந்து உரையாற்றிய மலேசிய் அமைச்சர் டத்தோ எம்.சரவணன், தமிழினம் தனது பண்பாடு, கலாசாரம் என்பவற்றை மறந்து போகின்றது.

இந்த நிலைமை ஏற்பட்டால் தமிழன் என்ற இனம் ஒரு காலத்தில் இருந்தது என்பதாகவே எதிர்காலம் இருக்கும் என்றார்.

யூத இனத்திற்கு ஏற்பட்ட அழிவுகள் கொஞ்சமல்ல. ஆனால் அந்த அழிவுகளின் மத்தியிலும் யூத இனம் எழுந்து வீராப்புடன் வாழ்கின்றது. இதற்குக் காரணம் தமக்கு அழிவு ஏற்பட்டபோது யூத இன மக்கள் பல்வேறு இடங்களுக்கு புலம்பெயர்ந்து சென்றிருந்தனராயினும் தாம் வாழ்ந்த இடம் எங்கும் தமது இன, மத, பண்பாடுகளை யூத இனம் கட்டிக் காத்தது. இதன் காரணமாகவே பேரழிவுகள் ஏற்பட்டிருந்த போதிலும் யூத இனத்தை அழிக்க முடியாமல் போயிற்று.

ஆனால் எங்கள் தமிழினத்தின் நிலைமை வேறாக உள்ளது. இன்று தமிழர்கள் உலகெங்கும் வாழ்கின்றனர்.

எனினும் அவர்கள் தாம் வாழும் நாட்டின் கலாசார பண்பாடுகளுக்கு இசைந்து வாழப் பழகிக் கொள்கின்றனரே தவிர, தங்கள் இனத்தின் பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காக்க வேண்டுமென நினைக்கவில்லை. இது தமிழினத்தின் எதிர்கால ஆரோக்கியத்திற்கு மிகவும் சவாலானது என்றார்.

மலேசிய அமைச்சர் கூறிய விடயம் இங்கு ஈண்டு நோக்குதற்குரியது. அதிலும் குறிப்பாக ஈழத்தமிழர்கள் இது பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

எம்மண்ணில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக எங்கள் உறவுகள் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றனர்.

யுத்த காலத்தில் எங்கள் உறவுகள் தங்கள் உயிருக்கு உத்தரவாதம் பேசி வெளிநாடு சென்றமை ஏற்புடையதாயினும் இப்போது வெளிநாட்டில் இருக்கும் பிள்ளையின் பிள்ளையுடன் ஒரு பாட்டியின் தொடர்பாடல் எங்ஙனம் உள்ளது என்ற கேள்விக்கான விடை ஏக்கமுடையதாகவே இருக்கின்றது.

வெளிநாட்டில் வாழும் எனது பிள்ளையுடன் எங்கள் உறவு முடிந்துவிடும் என்ற ஏக்கம் சாதாரணமானதல்ல. இது உறவு நிலைகளில் மட்டுமன்றி எங்கள் இனத்துவ ரீதியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது.

சுருங்கக்கூறின் யுத்த காலத்தில் எங்கள் இருப்புக்கு உதவிய புலம்பெயர் உறவுகளின் தொடர்பு இன்னும் சில வருடங்களில் வேரறுந்து போகும் என்பதை மௌனமாக ஏற்றுக் கொள்வது என்பது ஜீரணிக்க முடியாத பெரும் துன்பமாகும்.

எனவே புலம்பெயர் தமிழர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியைக் கற்றுக் கொடுப்பதுடன் தமிழ் பண்பாட்டுக் கலாசார விழுமியங்களுக்கு அமைய அவர்களை வளர்த்தெடுக்கும் தார்மீகக் கடமையை செய்தாக வேண்டும்.

இல்லையேல் மலேசிய நாட்டு அமைச்சர் டத்தோ எம்.சரவணன் கூறியதுபோல் தமிழினத்தின் எதிர்காலம் ஆரோக்கியம் அற்றதாகவே அமையும்; கவனம்.

# திருகோணமலை விளையாட்டரங்கு பாதுகாப்பு பிரதேசமாக அறிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை, திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் அடிவாரத்தில் அமைந்துள்ள மக்கேசர் விளையாட்டரங்கு எதிர்வரும் புதன்கிழமை வரை பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அப்பகுதிக்கு எவரும் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டதாக திருகோணமலை பிரதி பொலிஸ்மா அதிபர் லால் பெரேரா தெரிவித்தார்.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் டி.சரவணராஜா இவ்விடத்தை நேற்று முன்தினம் 5 மணியளவில் பார்வையிட்டதன் பின்னர் எதிர்வரும் புதன்கிழமை வரை அவ்விடத்தை பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தி உள்ளார்.

திருகோணமலை, திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் அடிவாரத்தில் அமைந்துள்ள மக்கேசர் விளையாட்டரங்கில் புனரமைப்புபணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந் நிலையில் கடந்த 12 ஆம் திகதி இரவு 8 மணியளவில் கிணறு ஒன்றினை அகழும் பணியினை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் எலும்புகளும் எச்சங்களும் தென்பட்டன. இதனை தொடர்ந்து அன்று காலை முதல் இப்பகுதியில் அதிகமான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பிற்கு அமர்த்தப்பட்டனர்.

இப்பகுதிக்கு பொதுமக்கள் எவரும் இரவு 7 மணிவரை அனுமதிக்கப்படவில்லை அத்துடன் ஊடகவியலாளர்களும் அவ்விடத்திற்கு செல்ல தடைவிதிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இப்பகுதிக்கு தொல்பொருள் திணைக்களத்தினர் மற்றும் நில அளவை திணைக்களத்தினர் வைத்திய அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள் என பலர் சென்று பார்வையிட்டதை அவதானிக்க முடிந்தது.

திருகோணமலையின் நகரசபை தலைவர் க.செல்வராஜா மற்றும் உறுப்பினர்கள் மற்றும் உப்புவெளி பிரதேச சபையின் உபதலைவர் நிசாந்தன் ஆகியோர் அவ்விடத்திற்கு சென்று பார்வையிட எத்தனித்த போதும் அவர்களுக்கான அனுமதியும் மறுக்கப்பட்டது. இந்த விளையாட்டு அரங்கு திருகோணமலை நகரசபையின் பராமரிப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# காதலர் தினத்தை முன்னிட்டு 3 கோடி ரோஜாக்கள் ஏற்றுமதி

(சென்னை)

காதலர் தினத்தை முன்னிட்டு தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரிலிருந்து வெளிநாடுகளுக்கு 3 கோடி ரோஜாக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், பேரிகை, பாகலூர், தளி, தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் நிலவும் காலநிலை ரோஜா செய்கைக்கு ஏற்ற வகையில் உள்ளதாக அப்பகுதி ரோஜா உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 500 ஹெக்டேயர் பரப்பளவில் ரோஜா பயிரிடப்பட்டுள்ளது. (அ-2)

அங்கிருந்து உள்ளூர் நகரங்களுக்கு மட்டுமன்றி பிரான்ஸ், சிங்கப்பூர், மலேசியா, நியூசிலாந்து மற்றும அரேபிய நாடுகளுக்கும் ரோஜா ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இந்த ஆண்டு சீனாவில் ரோஜா உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் ஓசூர் ரோஜாவுக்கு வரவேற்று உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

குறிப்பாக தாஜ்மஹால், ரெட் ஜயன்ட், கஞ்ஜன் ஜங்கா, ரெட் ரோஸ், மிக்ரா, சிவப்பு ரோஜா ஆகிய ரகங்களுக்கு அதிக வரவேற்பு உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# காதல் பரிசு

(கொழும்பு)

உலகெங்கும் கொண்டாடப்படும் காதலர் தினத்தையொட்டி இராணுவப் படையின் சமிக்ஞை படைப்பிரிவு வித்தியாசமான காதல் பரிசொன்றை அங்கவீனமுற்ற படைவீரரொருவருக்கு வழங்கியுள்ளது.

2008 யூலை 25 ஆம் திகதி மாங்குளம் பகுதியிலுள்ள புலிகளின் பங்கரொன்றை கைப்பற்றுவதற்காக் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது நளின் குமார எனும் இராணுவ வீரர் காயமடைந்ததோடு இவரின் கண்பார்வையும் பாதிக்கப்பட்டது.

இந்த சம்பவத்துக்கு ஒன்றரை மாதத்துக்கு முன்னர் நளின் குமாரவுக்கு பெண் ஒருவருடன் காதல் தொடர்பு ஏற்பட்டது. இருவரும் நேரில் காணாமல் தொலைபேசியிலே காதல் செய்துள்ளனர்.

இருவருக்கும் நேரில் சந்திக்க அவகாசம் கிடைக்கவில்லை. யுத்தத்தினால் நளின் பார்வையை இழந்து அங்கவீனமுற்ற போதும் அவரின் காதலி அவரைக் கைவிடவில்லை.

இருவரும் திருமணம் செய்து கொண்டதோடு, இவர்கள் நளினின் சிறிய வீட்டிலே வாழ்ந்து வந்தனர். இது குறித்து அறிந்த இராணுவ சமிக்ஞை படைப் பிரிவு தளபதி ஜெனரல் அபேசேகர இவர்களுக்கு தலாவ பகுதியில் வீடொன்றை கட்டியுள்ளதோடு காதலர் தினமான நேற்று அதனை கையளித்தார். (அ-2)

# இலங்கை மீனவர்கள் 43 பேர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 43 பேர் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கைது செய்யப்பட்ட 43 மீனவர்களே இந்திய கடற் பாதுகாப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் 10 படகுகளும் இலங்கை கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இம் மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து மீன் பிடி மற்றும் நீர்வள திணைக்களத்திடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மாத்தறை, தெவிநுவர, திக்வெல்ல, திருகோணமலை, கந்தர பரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். (அ-2)

# உலமா சபையின் நிர்வாகிகள் தெரிவு

(பூந்தோட்டம்)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் வவுனியா மாவட்டத்திற்குரிய புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றுள்ளது.

இதன் நிமிர்த்தம் புதிய தலை வராக அக்சேக் என்.பி. ஜுனைத் (மதனி), செயலாளராக அக்சேக் எஜ.எம்.ஷிப்லி (மீஸானி). பொரு ளாளராக அக்சேக் எம். நவ்பான் (தப்லீகி), உப தலைவராக அக்சேக் எஸ்.எச்.தாகிர் (காமி), அக்சேக் எம்.எம்.மக்ரூப் (நத்வி), உப செயலா ளராக அக்சேக் எஸ்.எம். நஸீர் (சரபி) உறுப்பினர்களாக அக்சேக் எஸ்.எம்.ஏ. மஜீத் (காஸிமி), அக்சேக் எம்.எப். சாதிகீன் (பாரி), அக்சேக் ரி.எஸ். சாஜித் (காஸிமி), அக்சேக் எம்.எம். அஸ்கர்தீன் (மனாரி), அக்சேக் எம்.எஸ். ஜெஸ்மின் (நஜாகி), அக்சேக் கே. பீஸ் (நஜாகி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-9-266)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



கடவுள் என்பவர் ஒருவர்தான். ஹோமத்தின் போது நீங்கள் அழைப்பது கடவுள் அல்ல. நீங்கள் பல்வேறு தேவர்களை அழைக்கின்றீர்கள். நம்முடைய சந்நியாசிகள் ஹோமம் செய்யும்போது என்ன நடக்கிறது என்பதை உங்களில் பெரும்பாலோரால் காணமுடியும்.

நீங்கள் ஆஹுதிகள் கொடுக்க கொடுக்க அவைகள் உயர் நிலையிலுள்ள தேவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதை நீங்கள் உங்கள் கண்களை திறந்தவாறே காணமுடியும்.

அவர்கள் கடவுள் அல்ல. ஆனால் மிகச் சக்தி வாய்ந்த தேவர்கள் ஹோமம் செய்யும்போது தீர்த்தத்தை வடகிழக்கில் விடும்போது அக்னி தேவன் எழுந்தருளுகிறார். இதுபோன்று சில முறைகள் உள்ளன. உங்களுடைய மூன்றாம் கண் திறந்திருந்தால் இவைகள் நடப்பதை உங்களால் நிதர்சனமாக காணமுடியும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## பொறுமையைக் கடைப்பிடி



- வாழ்வில் மேல் நோக்கி உயர்த்துவது அனைத்தும் நன்மை. முன்னேற்றத்தை தடுத்து கீழே தள்ளி வீழ்ச்சிக்கு உள்ளாக்குவது தீமை.
- நல்லொழுக்கம் என்பதில் சிறிதளவும் சுயநலம் இருப்பது கூடாது. எந்நிலையிலும் பொதுநலத்துடன் இருக்கப் பழகுங்கள்.
- இறைவனே ஏழையின் வடிவில் நம் முன் நிற்கிறான். அந்த ஏழையின் துன்பம் துடைப்பது நம் அனைவரின் கடமை.
- இறந்த உடலில் உயிர் மீண்டும் புகுவதில்லை. அதுபோல, இறந்த காலமும் மீண்டும் வரப்போவதுஇல்லை. நிகழ்காலமான இன்று வாழ்வதே முக்கியம்.
- பூமிதேவியைப் போல பொறுமையைக் கடைப்பிடியுங்கள். பொறுமையுடன் இருப்பவன் காலடியில் உலகமே கிடக்கும்.
- ஒற்றுமையுடன் இணைந்து பாடுபட்டு வளர்ச்சிப்பாதையில் முன்னேறுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய போட்டி

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. இன்று காலை 7 மணி முதல் ஆண்களுக்கான காற்பந்தாட்டப் போட்டிகள் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

எனவே, பதிவு பெற்ற இளைஞர் கழக அணிகள் குறித்த நேரத்தில் வருகை தந்து போட்டிகளில் பங்கு பற்றுமாறு கரவெட்டி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் மனோராஜ் கேட்டுள்ளார். (கு-23)

# வீதியோட்டப் போட்டி

பண்டத்தரிப்பு பங்கின் மறைக்கல்வி மாணவர்களும் பிறைற் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் ஆர்ம்பமாகவுள்ளன.

இதன் முதல் அங்கமாக வீதியோட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இதன் சிறப்பு நிகழ்வாக உள்ளூர் மாணவர்களுக்காக நடைபெறும் மரதன் ஓட்டப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் ஆலய முன் வீதியில் ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டி 7 கிலோ மீற்றர் தூரம் கொண்டது. போட்டியில் பங்கு பற்றும் அனைத்து வீரர்களும் மருத்துவப் பரிசோதனைச் சான்றிதழ்களை சமர்ப்பிப்பது அவசியமானது.

இதுவரை பதிவு செய்யாத மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினர் கேட்டுள்ளனர். (கு-23)

# ஐ.பி.எல்.ஏலம்

7ஆவது ஐ.பி.எல். போட்டிகளுக்கான வீரர்களின் ஏலம் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றது.

முதல் நாளில் 70 வீரர்களும் (ரூ.212.35 கோடி), 2ஆவது நாளான நேற்று 84 வீரர்களும் (ரூ.50.25 கோடி ) என்று மொத்தம் 154 வீரர்கள் ஏலம் போயிருக்கிறார்கள். இவர்களுக்கான ஏலத் தொகை ரூ.262.6 கோடியாகும்.

360 வீரர்கள் ஏலம் போகவில்லை.

ஏலம் இல்லாமல் முன்கூட்டிய தக்க வைக்கப்பட்ட வீரர்களின் எண்ணிகை 24. இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஊதிய தொகை ரூ.205.5 கோடி.

ஆக மொத்தம் இந்த ஐ.பி.எல். தொடரில் களம் இறங்கப்போகும் ஒட்டுமொத்த வீரர்களின் எண்ணிக்கை 178. இவர்களுக்காக அணிகள் செலவிடும் தொகை ரூ.468.1 கோடி.

பெங்களூர்21, கொல்கத்தா21, பஞ்சாப்23, சென்னை20, டில்லி23, ராஜஸ்தான்25, மும்பை21, ஐதராபாத்24 என்ற வீதம் ஒவ்வொரு அணிகளிலும் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். (க)

# சண்டிலிப்பாய் இ.கழக பெரு விளையாட்டுக்கள்

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டியின் பெரு விளையாட்டுக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இதன்முதல் அங்கமாக ஆண்டுக்கான கிரிக்கெட் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து இளைஞர் கழகங்களையும் குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டிகளில் பங்குபற்றுமாறு வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (க)

# முத்துத்தம்பி மகா வித்தியாலய வீதி, சைக்கிள் ஓட்ட முடிவுகள்

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலய 2014 ஆம் ஆண்டின் இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு ஆண் , பெண் இருபாலாருக்குமான வீதி ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகிய நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்றமாணவர்களின்விபரம்வருமாறு,

**வீதி ஓட்டம்**

**(ஆண்கள்)**

க.தினேஸ், மா.நிதர்ஷன், நா.ஜெரூஷன்.

**பெண்கள்**

தெ.யஸ்மினி, செ.நிவேதினி, க.கோபிசா.

**சைக்கிள் ஓட்டம்**


**ஆண்கள்**

தெ.மகிந்தன், ச.சிறிகாந்தன், ர.அக்பன்

**பெண்கள்**

நா. யாழினி, தெ.கௌரிசகானா, சி.தேனுஷா. (க)

# யாழ். இந்துவை வீழ்த்தி மத்திய கல்லூரி அபார வெற்றி



யாழ். இந்துவை ஒரு இனிங்ஸ் மற்றும் 147 ஓட்டங்களால் யாழ். மத்திய கல்லூரி வென்றது.

யாழ். மாவட்ட பாடசாலை 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த 9,10 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் மோதின.

நாணயற் சுழற்சியில் வென்று யாழ். மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பாடிய யாழ். மத்திய கல்லூரி நிரோஜனின் அதிரடி கைகொடுக்க 74 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 356 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் நிரோஜன் 50 பந்துகளில் 70 , சஞ்சயன் 58, நிரூபன் 54, மதுஷன் 50, யூலியஸ் 30 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி சார்பாக பானுகோபன் 114 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு தனது முதல் இனிங்சில் துடுப்பாடிய யாழ். இந்துக் கல்லூரி மதுஷன், சௌமிதரன் ஆகியோரின் பந்து வீச்சை தாக் குப்பிடிக்க முடியாது 123 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் கஜன் 30, பானுகோபன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுஷன் 4, சௌமிதரன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 233 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்தமையால் பலோன் முறையில் யாழ். இந்துக் கல்லூரி அணி துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் 2 ஆம் இனிங்சில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 86 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் துடுப்பாட்டத்தில் கஜன் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நிரூபன் 6, மதுஷன் 4 விக்கெட்டுக்களைக்கைப்பற்றினர். இதன் மூலம் இப்போட்டியில் ஒரு இனிங்ஸ் மற்றும் 147 ஓட்டங்களால் யாழ். இந்துக் கல்லூரி படுதோல்வியடைந்தது. (கு-23)

# ஆளுநர் வெற்றிக்கிண்ண சதுரங்க சுற்றுப் போட்டி

ஆளுநர் கிண்ண சதுரங்க சுற்றுப்போட்டியை கௌரவ ஆளு நர் ஆரம்பித்ததன் நோக்கமா னது

1. வடமாகாணத்தில் சகல பிரதேசங்களிலும் சதுரங்க ஆட்டத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலம்

✦ போட்டியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து சதுரங்க ஆட்டத்திற்கான சிறந்த ஒரு ஆடுகளத்தினை உருவாக்குதல்.

✦ இளையோர்களிடத்தில் கிராமிய மட்டத்திலிருந்து சதுரங்க விளையாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களது ஆளுமையினை விருத்தி செய்வதுடன் அவர்களது சிந்திக்கும் திறனையும் விருத்தி செய்யலாம்.

✦ இப்போட்டிகளின் மூலம் இறுதியாக தெரிவுசெய்யப்படும் முதன்மை வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்களை வழங்குவதுடன் அவர்களை தேசியமட்ட, சர்வதேசமட்ட போட்டிகளில் வடமாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குகொள்ள வைத்தல் ஆகும்.

நடைபெற்ற கோட்டமட்ட போட்டிகளில் 34 கோட்டங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 150 மாணவர்களும் பங்குபற்றி யுள்ளனர். இதில் 2 ஆயிரத்து 146 ஆண் மாணவர்களும் ஆயிரத்து 4 பெண் மாணவர்களும் பங்குபற்றியுள்ளனர். இது ஆளுநரது நோக்கத்திற்கு கிடைத்த பெரு வெற்றியாகும். இவ் எண்ணிக்கையினை எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு போட்டியில் 5 ஆயிரத்திற்கும் அதிகமாக அதிகரிப்பதே எமது நோக்கமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலயமும் மாவட்டமும் ஒன்றானபடியினால் கிளிநொச்சி போட்டி மாவட்ட மட்ட போட்டியாகவே நடைபெற்றது. அத்துடன் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் வலய ரீதியில் போட்டியாளர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டபடியினால் இப்போட்டிகளும் மாவட்ட மட்ட போட்டிகளாகவே நடத்தப்பட்டன.

கிளிநொச்சி- 163 பேர் 116 பேர் இறுதிப்போட்டிக்கு

முல்லைத்தீவு- 235 பேர் 112 பேர்

வவுனியா- 133 பேர் 94 பேர்

மன்னார்- 108 பேர் மாவட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். 17 ஆம் திகதி போட்டி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம்- 707 பேர் தெரிவாகியுள்ளனர். மாவட்ட பேரட்டி 22/23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயங்களிடத்தில் நடைபெற்ற போட்டிகளில்

தென்மராட்சி-137 பங்குபற்றி 137 மாவட்ட போட்டி

வடமராட்சி-318 பங்குபற்றி 146 மாவட்ட போட்டி

யாழ்ப்பாணம்-388 பங்குபற்றி 172 மாவட்ட போட்டி

வலிகாமம்-316 பங்குபற்றி 168 மாவட்ட போட்டி

தீவகம்-126 பேர் 84 மாவட்ட போட்டி

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



பருத்தித்துறை றோ.க.த.பாடசாலை வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்ற போது...(படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கத்துப் புலியை வீழ்த்தி தொடரை வென்றது இலங்கை




பங்களாதேஷ் அணிக்கு எதிரான 3-வது இருபது - 20 போட்டியில் இலங்கை அணி இறுதிப் பந்தில் சேனநாயக்கவின் துடுப்பின் மூலம் பெறப்பட்ட நான்கு ஓட்டங்களின் உதவியுடன் திரில் வெற்றி பெற்று இத்தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பங்களாதேசுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு 2 போட்டிகளைக் கொண்ட இருபது - 20 தொடரில் பங்குபற்றுகிறது.

இத்தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி இறுதிப் பந்தில் திரில் வெற்றி பெற்ற நிலையில தொடரை தீர்மானிக்கும் போட்டியான இப்போட்டி நேற்று சிட்டாஹொங்கில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக சபீர் ரஹ்மான், அனாமுல் ஹக் ஆகியோர் முறையே 26, 24 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக மலிங்க 3 விக்கெட்டுக்களையும், சேனநாயக்க, குலசேகர ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 121 ஓட்டங்கள் என்ற எளிய இலக்கை வெற்றியிலக்காகக் கொண்டு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களால் வெற்றியிலக்கை அடைந்தது.

இலங்கை அணி ஒருகட்டத்தில் 11.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்று தடுமாறியபோதிலும், 7-வது விக்கெட்டுக்காக சங்கக்கார - திஸார பெரேரா ஆகியோர் பகிர்ந்த 46 ஓட்டங்களும், வீழ்த்தப்படாத 8-வது விக்கெட்டுக்காக திஸார பெரேரா - சேனநாயக்க பகிர்ந்த பெறுமதிமிக்க 27 ஓட்டங்கள் இலங்கை அணி வெற்றியிலக்கை அடைய உதவியது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் சங்கக்கார 37, பெரேரா, சேனநாயக்க ஆகியோர் முறையே 35, 12 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக மஷ்ரபி மோர்டஷா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக பெரேரா (இலங்கை), தொடரின் நாயகனாக குலசேகர (இலங்கை) தெரிவாகினர்.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி வரும் 17-ம் திகதி டாக்காவில் ஆரம்பமாகிறது. (க)

## எனது கணவனை ...

முதல் மாலை 5.30 மணிவரை இடம்பெற்றது.

இந்த விசாரணைக்கு முதலாவது நபராக சாட்சியமளிக்க வருகைதந்திருந்த அவர் மேலும் தெரிவிக்கையில், இறுதிக்கட்ட யுத்தத்தில் இராணு வத்தினர் ஒலிபெருக்கி மூலம் விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்களை சரணடையுமாறு தெரிவித்து வந்தனர்.

இதன் காரணமாக கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் நானும் எனது கணவரும் பிள்ளைகளுமாக இராணுவத்தினரிடம் சரணடைந்தோம். எனது கணவரைப் தனியாகவும் என்னை தனியாகவும் விசாரணை மேற்கொண்ட இராணுவத்தினர் எனது கணவரை வைத்தியர் சிவபாலன் மற்றும் விடுதலைப்புலிகளின் துணை மருத்துவப் பொறுப்பாளராக இருந்த மனோஜ் என்பவருடன் ஒரு வாகனத்தில் அழைத்துச் சென்றனர்.

நாம் தனியாக ஓமந்தைச் சோதனைச் சாவடிக்குக் கொண்டு வரப்பட்ட போது அங்கு ஒரு வாகனத்தில் எனது கணவரும் மேற் குறிப்பிட்ட இருவரும் அமர்ந்திருப்பதை நான் அவதானித்தேன்.

அப்போது அங்கு விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுப்பொறுப்பாளர் தம்மிடம் சரணடைந்திருப்பதாகவும் எனவே ஏனைய விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும் தம்மிடம் சரணடையுமாறு ஒலிபெருக்கி மூலம் இராணுவத்தினர் அறிவித்திருந்தனர்.

அங்கு எனது கணவர் வாகனத்திலிருந்து இறக்கப்பட்டு ஒரு உயரதிகாரிக்கு முன்னால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதை நான் கண்டேன்.

அப்போது என்னை வட்டுவாகல் பிரதேசத்தில் விசாரணை நடத்திய அதிகாரியும் எனது கணவர் அங்கே இருக்கின்றார் எனக் காட்டினார். எனது கணவருடன் கதைத்துக்கொண்டிருந்த இராணுவ அதிகாரியை என்னால் அடையாளம் காட்ட முடியாது.

ஆனால் வட்டுவாகலில் எனது கணவரை ஒப்படைத்த இராணுவ அதிகாரியை அடையாளம் காட்ட முடியாது காரணம் அவர் மிகத் தொலைவில் காணப்பட்டார் என்பதால் அவரை சரிவர அடையாளம காட்டமுடியாது.

எனது கணவர் காணாமற்போனதில் இருந்து நான் பல துன்பங்களை எதிர்நோக்கி வருவதுடன்மன உளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளேன்.

ஒரு முறை தற்கொலை முயற்சியும் மேற்கொண்டுள்ளேன். எனது அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில்தான் நான் தற்போது வாழ்ந்து வருகின்றேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட நான் விரும்புகின்றேன்.

எனது கணவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இருந்தாலும் அவரை சட்டத்திற்கு முன்பாக நிறுத்துமாறு நான் கோருகின்றேன்.

இராணுவத்தினரின் வாக்குறுதிகளை நம்பியே எனது கணவனை ஒப்படைத்தேன். எனது உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு யாருமற்ற நிலையில் அவல வாழ்க்கை வாழ்ந்துவருகின்றேன்.

எனது தந்தையும் கடந்த 1990 ஆம் ஆண்டு காணாமற்போயிருந்தார். தாயார் ஒருகண்பார்வையற்றவர். எனது வீட்டில் நான் ஒருபிள்ளை தான். எனது தாயார் யாழ்ப்பாணத்திலிருந்த ஒரு வீட்டையும் விற்று தந்த பணத்தை செலவு செய்து கிளிநொச்சி உதயநகரில் கட்டிய வீட்டையும் இராணுவத்தினர் சுவீகரித்து வைத்துள்ளனர். கடந்த ஐந்து வருடங்களாக அந்த வீட்டைக் கேட்டு அலைந்து திரிகின்றேன்.

இதுவரை நான் எனது கணவர் தொடர்பில் எவரிடமும் முறைப்பாடு செய்யவில்லை. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உங்கள் முன்னால் நான் முதற்தடவையாக சாட்சியமளிக்கின்றேன். இதனால் எனக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த ஆணைக்குழு எனது பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## கடலில் மூழ்கி...

பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறாக உயிரிழந்த சிறுவன் யாழ்.புற்றளை மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் கோகி லராஜா பிரகாஷ் (15) என்பவரே ஆவார்.

சடலம் பிரேத பிரிசோதனைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

## ஜனாதிபதி ஆணைக்...

கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான யுத்த காலப்பகுதியில் வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகள் அந்த ஆணைக்குழுவின் தலைவர் மக்வேல் பராக்கிரம பரணஹம மற்றும் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான திருமதி சுரண்யா வித்யவத்தனே, திருமதி மனோ ராமநாதன் ஆகியோர் முன்னிலையில் முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக காணாமற் போனோர் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்று யாழ். மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பமானது.

### 48 பேர் சாட்சியம்

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு நேற்று இடம்பெற்ற விசாரணையின் போது 48 பேர் சாட்சியமளித்திருந்தனர். 60 பேருக்கு மேற்பட்டவர்கள் ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்டபோதும் 48 பேரே சாட்சியமளித்திருந்தனர். ஆனால் 100 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த விசாரணைக்கு சமுகமளித்திருந்தனர். ஆனால் அழைக்கப்பட்டவர்களிடம்தான் ஆணைக்குழு விசாரணை செய்யும். இருப்பினும் ஏனையவர்களிடம் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும். அத்தோடு வேறொரு தினத்தில் அவர்களிடம் விசாரணைகளை நடத்தவும் நடவடிக்கை எடுக்கும்.

### இராணுவம் மீது அதிகம்

நேற்றைய தினம் கோப்பாயில் இடம்பெற்ற ஆணைக்குழுவின் விசாரணையில் சாட்சியமளித்தவர்களில் அதிகளவானவர்கள் இராணுவத்திற்கு எதிராகவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு எதிர்ாகவும் சாட்சியமளித்தனர். இதில் இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியமளித்தவர்களில் அதிகளவானவர்கள் வயோதிபர்களாக காணப்பட்டனர்.

வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த போது நள்ளிரவில் வந்த இராணுவத்தினர் தமது பிள்ளைகளை கொண்டு சென்றதாகவும். தமது பிள்ளைகளை விட்டுவிடுமாறு மன்றாட்டமாக கோரிக்கை விடுத்தபோதும் விசாரணைகளுக்காக அழைத்து செல்வதாக கூறிவிட்டு அழைத்துச்சென்றனர். ஆனால் இதுவரைக்கும் எமது பிள்ளைகள் தொடர்பாக எந்தத் தகவல்களும் இல்லை.

இராணுவ வாகனங்களில் வந்தவர்களினால்தான் எமது பிள்ளைகள் கொண்டு செல்லப்பட்டனர். கொச்சைத் தமிழில் பேசிய படி எமது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து பிள்ளைகளை அழைத்து சென்றனர்.

விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்பில்லாதவர்களையும் இராணுவத்தினர் விசாரணைக்காக கொண்டுசென்றனர்.

இறுதிக்கட்டப் போரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பலர் காணாமற் போவதற்கு இராணுவம்தான் காரணம் என்றும் உறவினர்கள் தமது சாட்சியங்கள் ஊடாக வெளிப்படுத்தினர்.

### பாதுகாப்பு வேண்டும்

ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்தவர்களில் பலர் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தனர். காணாமற்போன தமது உறவினர்களை தேடும்போது பலதரப்பினரால் தாம் அச்சுறுத்தப்படுவதாகவும். தற்போது இந்த ஆணைக்குழுவிற்கு சாட்சியமளிக்க வந்துள்ளோம். ஆனால் பாதுகாப்பற்ற அச்ச உணர்வுடன்தான் இங்கு வந்துள்ளோம் என்றனர். அத்தோடு இந்த ஆணைக்குழுவிற்கு சாட்சியமளிக்கவந்தவர்களில் பலர் தமது புகைப்படங்களையோ தாம் கூறியனவற்றையோ பிரசுரிக்க வேண்டாம் என்றும் தங்களை நிம்மதியாக இருக்கவிடமாட்டார்கள் என்றும் அங்கு கூடியிருந்த ஊடகவியலாளர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

### வருமானம் இல்லை

விசாரணைக்கு சாட்சியமளிக்க வந்தவர்களிடம் ஆணைக்குழுவினரால் முக்கிய கேள்வியாக எழுப்பப்பட்டது அதாவது வருமானத்திற்கு என்ன செய்கின்றீர்கள் என்பதே. இதற்கு பதலளித்தவர்களில் பலர் தமது குடும்ப நிலைமகவும் மோசமாகவுள்ளது எனவும். உழைத்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டியவர்களை தொலைத்து விட்டு தேடிக்கொண்டேயிருக்கின்றோம் என்றும் கண்ணீரவிட்டனர்.

கணவனை பிரிந்து கைக் குழந்தையுடன் பிறரின் உதவியை எதிர்பார்த்துத்தான் தான் வாழ்ந்து வருவதாக இளம்குடும்பப் பெண்ணொருவர் தெரிவித்தார்.

அத்தோடு முல்லைத்தீவில் ஆசிரியராக பணிபுரிந்து வந்த தனது 25 வயதுடைய மகனைக் காணாவில்லை. அவன் எங்கு சென்றானோ யார் அவனைக்கொண்டு சென்றனரோ தெரியவில்லை. என்று கண்ணீர்விட்டு அழுதார்.

இதேவேளை தனது மகனுக்கான மாதாந்த கொடுப்பனவை அரசாங்கம் வழங்கியபோதும் அந்தப்பணத்தை எடுக்க தான் தயாராகயில்லையெனவும் தனக்கு காணாமற் போன தனது மகன்தான் வேண்டுமெனவும் அந்த வயோதிபத் தாய் கோரினார்.

இதன்போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் அந்தக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுமாறும் காணாமல் போனவர்களை கண்டறியவே தாம் இந்த விசாரணைகளை நடத்துவதாகவும் ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு நேற்றைய தினம் இடம்பெற்ற ஆணைக்குழுவின் விசாரணையில் பங்கு கொண்ட காணாமற்போனவர்களின் உறவினர்கள் கண்ணீர்விட்டு அழுதபடி சாட்சியமளித்து ஆணைக்குழுவின் விசாரணையை சோகமயமாக்கினர்.

இதேவேளை கடந்த மாதம் கிளிநொச்சியில் இடம்பெற்ற இந்த ஆணைக்குழுவின் விசாரணயில் எவ்வாறு இராணுவத்தினர் மீது அதிகளவான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டதோ அதே போன்று யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட விசாரணையிலும இராணுவத்தினருக்கு எதிராக அதிகளவான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபத்தை நோக்...

வைத்துள்ளது. எனினும், இதுவரையில் அரசாங்கம் காத்திரமான விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகமான உள்ளக விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறான ஓர் முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவளிக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆலோசனையைக் கேட்டிருந்தால் நாடு இவ்வளவு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருக்காது.

நாட்டின்அனைத்து மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது. ஊடக அறிக்கை ஒன்றின் மூலம ஐக்கிய தேசியக் கட்சி இந்த தகவலை வெளியிட்டுள்ளது. (எ-11)


இலங்கையின் விசா ஆலோசனை வரலாற்றில் மிகப் பெரும் திருப்புமுனை

முதன் முறையாக :-

கனடாவில் படிக்க உழைக்க 5 வருட விசா

நம்பமுடியாவிட்டால். வென்றுவந்த விசாவை அக்குவேறு ஆணிவேறாகப் பரிசோதித்துவிட்டு மன நிறைவோடு எம்மோடு இணைந்து கொள்ளலாம்.

இவ்வாய்ப்பு சில மனிதருக்கு, சொற்ப காலம் மட்டுமே நீடித்திருக்கும்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
www.thisaivisa.com
(C-6510)



GCE (O/L) தகைமையுடன்... edexcel

யாழ் நகரில்...




BTEC National Diploma in

Engineering

International Engineering Foundation (IEF)

- GCE (A/L) இல் கணிதப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு தகைமை இன்றி GCE (O/L) தகைமையுடன் Engineering பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான அவசியமான தகைமையினை இப்பாடநெறி வழங்குகின்றது.
- Engineering துறையில் அதிகரித்து வரும் உயர் தொழில் வாய்ப்புகளை விரைவாக அடைந்து கொள்வதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறி.
- 10 மாதகால துரித பாடநெறியை BCAS Campus இன் யாழ் வளாகத்தில் பூர்த்தி செய்து இலங்கையில் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் நீங்கள் விரும்பும் துறைகளில் Engineering பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான அனுமதிகளை இப்பாடநெறி உத்தரவாதப்படுத்துகிறது.

Enroll now and fast track your career in Engineering.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
15 YEARS | ISO 9001:2008 CERTIFIED
www.MacrgAdz.com
(C-502)
Colombo | Dehiwela | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar



SPEED LANKA EXPRESS Courier

வெளிநாடுகளுக்கான

தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net
(C-6501)



### ஜோதிடர் வருகை

இந்தியாவின் பிரபல ஜோதிடர் C.M. சாமி (Dip. in Astrology) யாழ். வருகை. ஜாதக விளக்கங்களுடன் மலையாள மாந்தீரீக முறைப்படி தீர்வு காணல்.

தொடர்பு :

என். பாலசுப்பிரமணியம், அம்மன் வீதி, தலங்காவில் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி. Tel : 0777684406

(5573)


## சாட்சியமளிப்...

தியில்வடக்கில்காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவெனஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகள் அந்த ஆணைக்குழுவின் தலைவர் மக்வேல் பராக்கிரம பரணஹம மற்றும் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான திருமதி சுரண்யா வித்யவத்தனே, திருமதி மனோ ராமநாதன் ஆகியோர் முன்னிலையில் முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக காணாமற் போனோர் பற்றி விசாரணை செய்யும்ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள்நேற்று யாழ்மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பமானது.

இதனையடுத்து அந்த ஆணைக்குழுவினரால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போது எழுப்பட்ட கேள்விக்கு பதலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தவர்களை யாரும் அச்சுறுத்தப்பட்டதாக இதுவரைக்கும் எமக்கு எந்த விதமான முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை.

அப்படி யாராவது எதிர்காலத்தில் அச்சுறுத்தப்பட்டால் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதிகாரம் எம்மிடம் உள்ளது.

இதனைவிட பாராளுமன்றத்தில் விசேட சட்டமூலம் ஒன்றும் சாட்சிகளைப்பாதுகாப்பதற்காக கொண்டுவரப்படவுள்ளது.

அத்தோடு நட்டஈடும் வழங்க நடவடிக்கை மேற்கொளளப்பட்டு வருகின்றது.

இந்தவிசேட சட்டமூலம் ஊடாக இதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)


தமிழ் மொழி விளக்கங்களுடனும் முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய

Diploma in Hardware Engineering

நமது கணினிகளில் பிழைகளைக் கண்டறிந்து திருத்தம் செய்து-பராமரித்துக் கொள்வதற்கு கணினியை அசம்பிள் செய்து கொள்வதற்கு OS installation, Repairing, Laptop சேவிஸ் செய்தல் போன்றவற்றுடன் சுயதொழில் வாய்ப்பினை உருவாக்கிக் கொள்வதற்குமான கற்கை நெறியாகும்.

Micro processor, HDD ,FDD All Type of cards, CD Rom, Mother boards, Installation of O/S (windows 8,7 ,XP/ Linux) & Software, Assembling, Upgrading, Configuring ,Troubleshooting, Repairing, Printers, Networking, Network essentials,User Level Networking.

100% Practical Training Free Software CD's

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M. M. V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.: 021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | No. 130 கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.: 021-224 1970 |



UK | USA| Malaysia | India | Georgia | Latvia
Russia| Ukraine | Bangladesh | China

STUDY MEDICINE

MBBS



RECOGNISED BY
W.H.O & SRILANKAN MEDICAL COUNCIL

2014 INTAKE
APPLICATIONS ARE OPEN FOR NEXT INTAKE

LIMITED SEATS
CALL: 021 7306000
021 4926222
077 3013060

ICS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna.
107, B 1/1 Galle Road, Colombo - 06
077 3013060



BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

IELTS
Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

EVENING & WEEKEND CLASSES STARTS ON

| Batch I | Batch II | Batch III | Batch IV |
|---|---|---|---|
| 15.02.2014 | 17.02.2014 | 22.02.2014 | 24.02.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074
(C-6497)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org